பக்கங்கள் 8.

பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

தனிப்பிரதி விலை சதம் 5.

# இலங்கை இந்தியன்

இலங்கை இந்தியரின் நலவுரிமைகளுக்காக உழைத்துவரும் ஓர் சிறந்த தமிழ் வாரப்பத்திரிகை

புதன் கிழமை தோறும் வெளி வருவது

THE CEYLON INDIAN

A WEEKLY JOURNAL WHICH CHAMPIONS THE CAUSE OF INDIANS IN CEYLON

Pubished Every Wednesday

"என்கடன் பணி செய்து கிடப்பதே" "சாதி மதங்களைப் பாரோம்" "நாமார்க்கும் குடியல்லோம்"

| மலர் 1. | 1928-ம் வருஷம், நவம்பர் மீ 14 வ புதன்கிழமை. | இதழ் 23. |
|---|---|---|

## உண்மை அழகு.

அழகு என்னும் பொருளை என்ன விலை கொடுத்தாவது யாவரும் விலைக்கு வாங்கிவிட எண்ணுவர். அழகுபெறக்கூடிய ஓர்பொருள்தான். அதற்கு ஒருவிலையும் உண்டு. உலகில் அழகுமிகுந்தவர்களைக் கவனிக்கும் பொழுது இரண்டு விஷயங்கள் தெளிவாய்த் தெரிகின்றன. நல்ல ஆரோக்யத்தையும் சந்தோஷத்தையும் பெற்றிருப்பவர்கள் தாம் அழகுடன் விளங்குகிறார்கள். ஆரோக்யம்இல்லாத ஒருசரீரம் எத்தனை அணிகள் அணிந்தாலும் ஒளியின்றி விகாரமாய்த் தென்படுகின்றது. களிப்பில்லா முகம் வாடிய மலர்போல உணர்வற்றுக் களங்கமடைகின்றது. ஆகவே இயற்கையான அழகைப் பெறவேண்டுமானல் ஆரோக்யமும் களிப்பும் அவசியம்என்று தெரிகின்றது. ஆரோக்யம்என்பது நோயில்லாமல்மட்டும் இருப்பதன்று. ஆனால் எந்தவேலையையும் செய்து முடிக்கும் வன்மையும், இடையில் சோர்வு இன்மையும், வெளிப்பொருள்களின் உதவியின்றியே ஊக்கத்துடன் விளங்குவதும் ஆரோக்யத்தை வெளிக்காட்டுகின்றன.

பலநாடுகளில் பல ஜாதியார்கள் வெவ்வேறு தேகஅமைப்புக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குள் அழகுள்ளவர்களென்று வர்ணிக்கப்படும் அனைவரும் ஒரேமாதிரி சிற்றிடையும் மதிமுகமும் பெற்றிருக்கவில்லை. எனினும் அவர்கள் அழகுடையவர்களே. அழகு பலநாட்டினருள் பலதிறப்பட எண்ணப்படுகிறது. ஒருநாட்டுப் பெண்கள் தலையை அதிகமாய் வளர்த்தல் அழகற்றதென்று எண்ணுகின்றனர்; மற்றொருநாட்டார் நீண்ட கூந்தல் முழுதும் செம்மையும் மஞ்சளும் பொருந்தி செம்பொன்னைப்போல இருக்கவேண்டுமென்று கருதுகின்றனர். நம்நாட்டார் குழல் நீண்டு, அடர்ந்து, கருத்து மேகத்தைப் போல விளங்கவேண்டுமென்று கொள்ளுகின்றனர். இவ்வாறே பிறஉறுப்புக்களைப்பற்றியும்எண்ணற்ற அபிப்பிராய வேற்றுமைகள் பலஅறிஞருள்ளும் காணப்படுகின்றன. ஆயினும்எல்லோரும்ஒப்புக்கொள்ளக்கூடிய சில ஒற்றுமைகளும் இருக்கின்றன. அழகுக்கு உற்பத்திஸ்தானம்— அடிப்படை ஆரோக்யம் என்பதும், சீரவளர்ச்சிக்கு இன்றியமையாத களிப்பான மனநிலை அழகுக்கு மிகவும் பயன்படுவதென்பதும் பலரும் ஒப்புக்கொண்ட பழைய உண்மைகளாவன.

இவற்றைப் பெறுவதற்கு முதலாவதாகப்பெண்மக்கள் ஆகாரவிஷத்தில் கவலைகொண்டு கவனிக்கவேண்டும். பலால் முதலியவற்றை விலக்கி சுத்தமான உணவுகளைத் தயார்செய்தல், அவைகள் கெட்டுவிடாமல் பாதுகாத்தல்; மிதமான போஜனம்செய்தல் முதலியவற்றில் பெண்கள் மிகுந்தசிரத்தை கொள்ளவேண்டும். அளவுக்குமிஞ்சிய உணவாலேயே அநேக வியாதிகள் தோன்றுகின்றன. சரியான உணவை ப்பசித்தபொழுது அளவறிந்து புசித்தால் மருந்தென்பதே தேவையில்லாமற்போய்விடும். நம்நாட்டுப் பெண்கள் சாப்பிடும்பொழுது கதைகள் பேசிக்கொண்டு அளவுக்குமிஞ்சி உண்டுதாங்களும் கஷ்டப்படுவதுடன் பலவீனமான சந்ததிகளுக்குக் காரணமாகிறார்கள் என்ற வசை தொலைய வேண்டும். ஸ்நானம், தேகப்பயிற்சி முதலியவிஷயங்களிலும் பெண்கள் சிரத்தை காட்டவேண்டும்.

இரண்டாவதாக நம்பெண்கள் களிப்புடன் இருக்கப் பழகவேண்டும். சந்தோஷம் ஒரு மனநிலை. சென்றதை நினைத்து வருந்திக் கொண்டேயிருப்பது பெண்களிடம் குடிகொண்ட ஒரு வழக்கமாயிருக்கிறது. எதிலும் துன்பத்தை மறந்து இன்பமடைய எண்ணவேண்டும். கிடைத்த ஒழிவுகாலத்தை வருத்தப்படவும், பிறரிடம் சொல்லி அழவும் கழித்துவிட்டால் நம் ஜாதி என்றுதான் மேன்மையடையக் கூடும்? உயர்ந்த புத்தகங்களையும், கதைகளையும், சமய நூல்களையும் படித்தல் நலம். கணவர்முன்பு மட்டும் சந்தோஷமாயிருக்கவேண்டுமென்பது தவறு. வீட்டு வேலைக்காரியிடமும், உறவினரிடமும் எக்காலத்திலும் சந்தோஷத்துடன் மலர்ந்த முகத்தோடும் இன்சொல்லோடும் விளங்குவது அழகைத் தானே காட்டுகின்றது! துக்கபடுவதும், கோபப்படுவதும்மனச்சாந்தியை அழிப்பதுடன் முகத்தில் பலவிகாரக்குறிகளையுண்டுபண்ணி காளாரம்பத்தில் அழகைக்குன்றச்செய்து விடுகின்றன. அழகுக் கோயில் ஆரோக்யம், ஆனந்தம் ஆகிய பாறைகளின் மேல்கட்டப்படுகின்றது.

(ப.ரா.)

## திருநாவுக்கரசு சுவாமிகளின் சரித்திரம்.

(வித்வான் ஆர். எ. பிரம்மணயகம் பிள்ளை அவர்கள் எழுதுவது.)

———0———

[முன் தொடர்ச்சி]

இங்ஙனம் பன்னுளாக வீரட்டானத்தில், பெரும் மகிழ்ச்சியோடு வாழ்ந்திருக்கும்பொழுது, தமக்குண்டான சூலைநீங்கி கடவுளினருளைப் பெற்றிருந்தனர். அக்கால் இவ்விபரமறிந்த சமணகுருக்கள், இன்னவர்பால் பொறாமை கொண்டவராகி இவரின் திரியுதலையோதி இன்னவர்க்குத் [illegible] [illegible] என உரைத்தனர். இதுகேட்ட அரசன் வெகுண்டு, தமது ஏவலாளிடம் திருநாவுக்கரசு சுவாமிகளை அழைத்துவரும்படி ஆக்ஞாபிக்க, விரைந்துசென்ற ஏவலாளர் திருநாவுக்கரசு சுவாமிகளிடம் மிகுபரிவோடு, ஐயனே! எமதரசன் தாங்களை அழைத்துவரும்படி கட்டளையிட்டனன் எழுந்தருள்க வென்றனர். அதற்கு சுவாமிகள்,

நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம் நரகத்திலிடர்ப் படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம் இன்பமே யென்னாளும் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கார நற்சங்க வெண்குழையோர் காதிற்
கோமார்க்கே நாமென்று மீளாவாளாய்க் கொய்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே.

யென்றபாடலைப் பாடினதுவம், அரசனது ஏவலாளர் சுவாமியின்திருப்பாதகமலங்களில் வீழ்ந்து, ஒப்பில்லாமணியே! தாங்களோதிய பாடலால் வாராதிருக்கத் துணிந்தீர்போலும்; அங்ஙனம் மறுத்திடில் எம்மை ஆக்கினைக்குள்ப்படச் செய்ததொக்கும். அதுபற்றி தாங்களால்சிறைபுக வேண்டில் புகுகின்றோமென்றனர். அதுகேட்ட திருநாவுக்கரசு சுவாமிகள் மிகவும் அன்போடு பாருகர்களா! நீவிர்மலங்காதீர்கள். எம் பொருட்டால் உமக்குச் சிறைவாசகம் வாராதிருக்கும்படி, யானிதோ வருகின்றேன். செல்வீரென வழிசெலவிடுத்து, அரசன் திருமாளிகை யெய்தினர். அங்குவரக்கண்ட சுவாமிகளை, மிகவும் சினக்குறியால் பார்த்து அருகிலிருக்கும்சமணச்சாரியைநோக்கி, அண்ணலே! இன்னவனுக்கு என்ன தண்டனையிடுவதென மொழிந்தனர். அதற்கு சமணகுருக்கள் மீளாதிருக்கும்படி, சுண்ணம்புக்காளவாயிலிட வேண்டுமென்றனர். அதற்கிசைந்த அரசனும், காருண்ணியமில்லாது அவ்வாக்கினையை வெளியிடவும், கொலைபுரியும் காவலர்கள் விரைந்து சுவாமிகளைப்பிடிதிழுத்து, தன்புறத்தி ஓரறையில் நமது சுவாமிகளைக் கொண்டு நிறுத்தி அவ்வறை நிறையுமளவும் நீற்றைத்தட்டி மூடினார்கள். அப்போது சுவாமிகளுக்கு உண்டான இன்பம் அளவிடுதற்கரியதாயிருந்ததெனினும்பாடலை மிகு ஆனந்தமாய்ப்பாடினர். அப்பொழுது அவ்வறையினுள்,

மாசில்வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை யிணையடி நீழலே.

குற்றமில்லாத வீணையின் நாதம்போலும் மாலையினிற் றோன்றுகின்ற சந்திரன் போலும், இளங்காற்றின் சீதளம்போலும், சிறுகுடானகாலைக்கதிரைப்போலும்,சுவாமியையடைக்கப்பெற்ற அறையானது குளிர்ந்த தடாகத்தைப்போலும், இருந்தது. இதனையறியாத அரசன் சிலதினம் சென்று அவ்வறையைச் சோதிக்கவும்சுவாமிஆனந்தமாயிருக்கக்கண்டு வியப்புற்றவராகி, சமணகுருக்களைநோக்கி ஐயனே! இக்கொடியன், நம் சமயத்திருந்து கற்ற மந்திர தந்திரத்தாலுயிர் தப்பிக்கொண்டான். ஆனதுபற்றி இன்னவனை சும்மாவிடுதலடாதது. இனியென்செய்வதென்றனன். அதுகேட்ட சமணச்சாரியர் நஞ்சுண்பிக்க வேண்டுமென ஓதலும், அதற்கிசைந்த அரசன் நஞ்சருந்தச் செய்தற்காயினன். அக்காலதனை யறிந்த நாயனர் மிகஅன்போடு நஞ்சிட்ட அன்னத்தையுண்ணும்போது, விடமுண்ட கண்டனடியார்க்கு நஞ்சம் விடமோ? அமிழ்தேயென்றுண்ணவும், இறவாதிருக்கக்கண்ட நாயனர்மீது முனிந்தவராகி, மீண்டும் குருமார்களை வினவி, எந்தையே! இக்கொடியன் நம்மிடமிருந்து கற்ற மந்திர வல்லமையினல், நாமிட்ட தண்டனைகளை செயிக்கின்றான்; ஆனதுபற்றி கடுந்தண்டனையாதுள, ஆய்ந்துமொழியுமென்றோதினன். அதற்கு சமணச்சாரியர், சிறிதுமிரக்கமில்லாது பட்டத்து யானையைவிட்டுக் கோறல் செய்வதேநலமென வோதினர். அதற்கிசைந்த அரசனனவன் அவ்விதம் செய்ய யானையானது நாயனரை சுற்றிவலம்வந்து நமஸ்காரம் செய்தது. அதுகண்ட சமணர்கள்வருந்தியானைப் பாகனையழைத்துஅங்குசததினல் யானையைவருத்தி கொல்லென்றனர். அங்ஙனம் செய்யமுயன்ற பாகனையும், சமணச்சாரிகளிற் சிலரையும் யானையானது கொன்றது. அதனைக்கண்டு தப்பியோடிய சிலசமணர்கள் அரசனிடம்போய் ஐயனே! நாங்கள் பிழைத்தது பெரிது. இக்கொடியன் இங்ஙனம் செய்வது நமதுமந்திரவன்மையேயாகும். ஆனதினல் இனிமேல் இத்தவஞ்சகனை சும்மாவிடக்கூடாது. நமது கற்றூணில்கட்டி கடலிலமிழ்த்தி விடவேண்டுமென்றனர். அதுகேட்ட அரசன் மிகவும் மகிழ்ந்து, பெரிதானவோர் கற்றூணைஎடுத்து நமதுநாயனரை அந்தகற்றூணில் சேர்த்துக்கட்டி கடலில் அமிழ்த்திவிடும்படி வழிசெலவிடுத்தனன். அதனை எடுத்துக்கொண்டு, சமுத்திரத்தின் நடுவேகொண்டுவந்து நமதுநாயனரைக் கடலில்வீழ்த்தும் போது

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக்கை [தொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாச்சி [னும்

(6-ம் பக்கம் பார்க்க)

# இந்தியத்தொழிலாளரின் நிலைமை

## இந்தியா கவர்ன்மென்ட் ஏஜன்ட், கனம் ஹைதரி அவர்களின் விரிவான ஆராய்ச்சி

பொருளாதார விஷயக் குறிப்புகள்.

(முன் தொடர்ச்சி)

இதுகாறும் இலங்கைத்தோட்டக்காடுகளிலிருக்கும் இந்தியத்தொழிலாளர்கள் தோட்டங்களிலிருந்துவரும் நிலைமையைப் பற்றி பலகுறிப்புக்களை வரைந்தோம். சென்ற இதழில் இந்தியத்தொழிலாளரின் குடியிருப்புவசதிகள் எவ்வாறு நிர்வகிக்கப்பட்டு வருகிறது என்பது பற்றியும் அது விஷயமாகவுள்ள குறைபாடுகளைப் பற்றியும் சில வரைந்தோம். இன்று அவற்றைத்தொடர்ந்து இன்னும் சில விஷயங்களைக் குறிப்பிடுகின்றோம். தொழிலாளர்களைப்பற்றிய பிரச்னைகள் பல இவ்விஷயத்தில் அடங்கியுள்ளதை நம்நண்பர்கள்கவனம் செலுத்திப் படிக்குமாறு வேண்டுகிறோம். கனம் ஹைதரி அவர்கள் அவரது யாதாஸ்தில் கூறுவதாவது:—

நான் செல்லச்செல்ல ஒவ்வொரு தோட்டத்திலும் தேர்ச்சிபெற்ற வைத்தியர் ஒருவரையும ஓர் மருந்துவச்சியையும் தோட்ட ஆஸ்பத்திரியை யொட்டி ஒன்றிரண்டு பிரசவ அறைகளையும் தோட்டத்தார்கள் ஏற்படுத்திக் கொள்வார்கள். இவ்வித சௌகரியங்களைச் செய்வதால் தோட்டங்களிலிருப்பவருள் சிசு மரணமென்பது மிகவும் குறைவாகவேயிருக்கும். வைத்திய சுகாதார டைரக்டர் அவர்களின் கணக்கின்படி, 1927-ம் வருஷத்தில் தோட்டக்காடுகளில் பிறக்கும் குழந்தைகளில் 1000-க்கு 239 வீதமும் 1926-ல் 1000-க்கு 209 வீதமும் சிசு மரணமிருந்ததாகத் தெரிகிறது. அதே வருஷத்தில் இலங்கை முழுதும் கணக்கிட்டுப்பார்த்ததில் 1000-க்கு 174 எனக் காணப்பட்டது. தன் குழந்தையை எவ்விதம் பாதுகாப்பது என்னும் விஷயத்தில் ஒரு தொழிலாள ஸ்திரீயானவள் மிகவும் மெத்தனமாகவேயிருந்து வருகின்றாள். வயதில் முதிர்ந்த குழந்தைகளுக்கு ஆகாரம் கொடுக்கும் முறைகளைக் கவனிப்பதற்குத் தேர்ச்சி பெற்ற பெண் டாக்டர்கள் மிகவும் பயன்படுவார்கள். சிறுகுழந்தைகளுக்கு சேரிடக்கூடும் தொத்து வியாதிகளைக் கவனிப்பதற்கும் இவர்கள் உதவியாகவிருப்பார்கள். இவ்வேலைகளை இப்பொழுது தோட்டங்களிலுள்ள ஸ்திரீகளே நடத்துகின்றனர்.

தோட்டக்காடுகளிலுள்ள இந்தியத் தொழிலாளருக்கிடையே பெருத்த உயிர்ச் சேதத்தையுண்டுபண்ணும் கொக்கிப்புழு என்ற வியாதி மிகவும்கொடிய வியாதியாகும். சுகாதார இலாக்காவின் டைரக்டர் 1927-ம் வருஷத்தில் அவரதுயாதாஸ்தின் முக்கியபாகங்களை எனக்கு அனுப்பியுள்ளார். அவ்யாதாஸ்தில் இந்த வியாதியைத் தடுப்பதற்கான சில பிரத்தியேக முறைகளைப்பற்றியும் தோட்டக்காடுகளிலுள்ள இந்தியத் தொழிலாளரின் பொதுவான சுகாதார நிலைமையைப் பற்றியும் கூறப்பட்டிருக்கின்றன.

### மதுக்கடைகள்

எனக்குமுன் கவர்ன்மென்ட் ஏஜென்டாக விருந்தவர் 1926-வருஷத்து யாதாஸ்தில் கூறியுள்ள விஷயங்கள் முற்றிலும் சரியென்றே கூறுவேன். இவ்விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்யுமுன் எக்ஸைஸ் கமிஷனர் அவர்களின் ரிப்போர்ட்டை கவனிக்கவேண்டும். இது பற்றி லேபர் கண்ட்ரோலர் அவரது 1926-ம் வருஷ ரிப்போர்ட்டில் சில கருத்து வாய்ந்த விஷயங்களை வெளியிட்டுள்ளார். அவர் கூறுவதாவது:-

இலங்கையிலுள்ள மதுக்கடைகள் எல்லாவற்றையும் மூடிவிடவேண்டுமென்று இங்குள்ள மதுவிலக்குப்பிரசாரகர்கள் எண்ணுகின்றார்கள். தோட்டங்களுக்காக நடத்தப்படும் மதுக்கடைகளையும் அங்குள்ள ஜனங்கள் நினைத்தால் நிறுத்தி விடக்கூடும். இந்தியத்தொழிலாளரைத் தவிர ரோட்டு வரி கொடுக்கும் மற்ற ஜனங்களுக்கு இதுவிஷயமாக ஓட்டுரிமையுண்டு. அப்பொழுது ரோட்டுவரிபாக்கி வசூலிக்கப்படுவதில்லை. ஆகவே, வயதுவந்த இந்தியத்தொழிலாளருக்கு ஓட்டுரிமை ஏன் வழங்கக்கூடாதென்பது புலன்படவில்லை.”

### கல்விப்பயிற்சி

1927-ம் வருஷத்தில் நடந்துள்ள விஷயங்களைப்பற்றி கல்வி இலாக்கா டைரக்டர் அவர்களிடமிருந்து கிடைத்துள்ள விவரங்கள் பின்வருமாறு:—

1. 1926-ம் வருஷத்தில் 294-ம் 1927-ல் 304-ம் பள்ளிக்கூடங்கள் தோட்டக்காடுகளில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தன.

2. அவைகளில் 1926-ம் வருஷம் 10,369 ஆண்பிள்ளைகளும 2,028 பெண் குழந்தைகளும் 1927-ல் 12,393 ஆண்களும் 2089 பெண்பிள்ளைகளும் கல்விகற்று வந்தார்கள்.

3. இப்பள்ளிக்கூடங்களுக்காக 1926-ல் 91,342 ரூபாயும் 1927-ல 96,982 ரூபாயும் சகாயதனமாகக் கொடுக்கப்பட்டது.

4. ஆறு வயது முதல் பத்து வயதுக்குட்பட்டவராக 1926-ல் 43,216 ஆண் குழந்தைகளும் 37,651 பெண்குழந்தைகளும் வாசித்துவந்தார்கள். ஆனால் 1927-ல் 46,219—ம் 40,804—ம் குழந்தைகள் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்று வந்ததாகத் தெரிகிறது.

5. பள்ளிக்கூடங்கள் வைத்திருக்கும் கட்டிடங்கள் பொதுவாக திருப்திகரமாகவேயிருந்து வருகின்றன. இன்னும் சீர்திருத்தங்கள் எவ்வளவோ செய்யவேண்டியிருக்கின்றது. சில சிரத்தையுள்ள சூப்பிரண்டுகள் அவர்களது பள்ளிக்கூடத்தை அடுத்துச் சிறுதோட்டங்களும் அமைத்திருக்கின்றார்கள்.

6. தோட்டப் பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களாக வருபவர்கள் சாதாரணமாக, மிகக்குறைந்த யோக்கியதையுள்ளவர்களாகவேயிருக்கின்றனர். ஆனால் தக்க யோக்கியதையுடைய உபாத்தியாயர்கள் கிடைப்பது மிகவும் கஷ்டமாகவேயிருக்கின்றது. தோட்ட இன்ஸ்பெக்டர்கள் அந்தவருஷத்தில் சுமார் 650 தோட்டங்களைப் பார்வையிட்டனர்.

7. முக்கியமாகத் தோட்ட சூப்பிரண்டுகளின் ஒத்துழைப்பும் நேசபாவமும் குறிப்பிடத்தக்கதாகும். பார்வையிடப்பட்ட எத்தனையோ தோட்டங்களிலும் வெகு சில சூப்பிரண்டுகள்தான் கூறப்பட்டயோசனைகளுடன் ஒத்துழைக்க இசைந்தனர்.

1926-ம் வருஷத்தில் இக்காட்டுத் தோட்டங்களில் 6-வயது முதல் 10-வயது வரையுள்ள குழந்தைகள் 80,857 பேர்கள் இருந்தார்கள். ஆனால் அவர்களில் 12,397 குழந்தைகள்தான் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று கல்விகற்று வந்தனர். 1927-ம் வருஷத்தில் 87023 குழந்தைகளிருந்ததில் 15,232 பேர்கள் மட்டுமே பள்ளிக்கூடங்களுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். தோட்டக்காடுகளிலுள்ள குழந்தைகளின் எண்ணம் அதிகரிப்பதோடு பள்ளிக்கூடம் போகக்கூடிய குழந்தைகளின் எண்ணம் அதிகரிப்பதில்லை. இதற்குக்காரணம் இரண்டுள்ளன.

1927-ம் வருஷக்கடைசிக்குள்ளாக 10 வயதுக்குட்பட்ட குழந்தைகள் வேலைசெய்யக்கூடாதென்று எவ்விதத் தடையும் ஏற்படுத்தவில்லை. கல்வியறிவிலாத பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை இளவயதில் கற்கச் செய்வதைவிட அவர்கள் மூலம் சொற்ப ஊதியம் சம்பாதிக்கவே விரும்பினார்கள். முதலாளிகளும் குழந்தைகளின் கல்வியிலும் பயிற்சியிலும் கவனம் செலுத்த மனமில்லாதவர்களாயிருந்தனர். புதிய சட்டத்தின் மூலமாய் நன்மை ஏற்படுமென்று நம்புகிறேன்.

# சீர்திருத்தத்தைப்பற்றி சட்டசபையில் விவாதம்.

—0—

## இந்தியர் வாக்குரிமைக்கு மறுப்பு!

வாக்குரிமையைப்பற்றி டோனமூர் கமிஷன் செய்திருந்த சிபார்சின்மேல்சென்ற வியாழக்கிழமை சட்டசபையில் விவாதம் நடந்தது. முதலில் திரு. எ. மகாதேவ பேசுகையில் டோனமூர் கமிஷன் அங்கத்தினர்கள் இலங்கையில் பெரும்பாலாயுள்ள ஜனங்கள் சிறுபான்மைக் கட்சியாருக்கு எதிரிடையாக நில்லாது நீதியாயும் நேர்மையாயும் நடந்துகொள்வார்களென்று தங்களுக்குக் கிடைத்த சாட்சியங்களினின்றும் நம்பியிருந்தார்களென்றும், அவர்கள் இந்நாட்டை விட்டும் புறம்போனவுடன் மிஸ்டர் மொல்லமூறே குறிப்பிட்ட ஒருசமூகத்தை ஒதுக்கித்தள்ள வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டுப் பேசியதைக் கண்டித்துப் பேசினார். இந்தியர்கள் தாங்களாகவே வந்து இங்குள்ள மற்றவர்களுடன் சுகதுக்கங்களை அனுபவித்து வரும்பொழுதுகூட அவர்களை விலக்கித்தள்ளுவது உத்தமமில்லையென்றும் இந்தியர் வாக்குரிமையை மறுப்பவர்கள் கல்வியும் செல்வமும் பொருந்தியவர்களின் பிரதிநிதிகளேயென்றும், தொழிற்கட்சியார் இந்தியர் இலங்கையருக்கு நிகரான உரிமையை அனுபவித்து வரவேண்டுமென்றே விரும்புவதாயும், தோட்டக்கார ராஜதந்திரிகள் சிங்களத் தொழிலாளியும், மற்ற இலங்கைத்தொழிலாளியும் தங்கள் சகோதர இந்தியரிடம் கடுமையான அதிருப்தி கொண்டிருக்கின்றனர் என்று சொல்வது விசித்திரமாயிருப்பதாயும், சிங்களவர்கள் பின்னர் ஒருகாலத்தில் சபையில் குறைந்துபோகக் கூடுமென்ற பயத்தாலேயே மற்றும்சிலர் இந்தியருக்கு விரோதமாகப்பேச நேர்ந்ததென்றும் அவர் எடுத்துக்காட்டினார்.

இரண்டாவதாக மிஸ்டர் கொரியா முதன்முதல் தாம் கமிஷனர்களிடம் இந்நாட்டார் அனைவருக்கும் நிரந்தரமான வாக்குரிமை அளிக்கவேண்டுமென்று சொன்னதாயும், கல்வி நிபந்தனை கூடாதென்றும், மாதர்க்குக் கட்டுப்பாடுள்ள வாக்குரிமை கொடுக்க வேண்டுமென்றும் பேசினார். பின்னர் ஸர். பி. ராமநாதனவர்கள் யாவர்க்கும் சமமாயில்லாமல் தம்மை ஆண்டுகொள்ளச் சக்தியுடையவர்களுக்கே வாக்குரிமை கொடுக்க வேண்டுமென்றும், இல்லாவிடில் ஒருவருக்கும் குறையின்றி உரிமையளித்தலே நீதியென்றும், பூமியனைத்தும் கடவுளுடையதாயிருப்பதால மக்கள் தங்கள் தங்கள் இஷ்டம்போல் நினைத்தவிடத்திற் கெல்லாம் சென்று வாழச் சுதந்திர முடையவர்களென்றும், சிங்களவர்கள் வெளிப்புறத்திலிருந்து அவ்வாறுவந்து தற்செயலாய் இலங்கையில் குடியேறியவர்களென்றும், தற்சமயம் அவர்கள் அழியாத நாகரிகம் படைத்த இந்தியர்களை வெளியேற்றிவிட நினைப்பதாகாதென்றும் கூறினார். மிஸ்டர் ஸெனநாயக இந்தியருக்கும் மற்றவருக்கும் பேதபுத்தியை முதலில் ஏற்படுத்தியது இந்தியா கவர்ன்மென்ட் என்றார். இலங்கை சிங்களவர்களுக்கு மட்டுமின்றி இங்கு வசிக்கும் தமிழர், ஐரேப்பியர், முகம்மதியர் முதலியோருக்கும் உரியதேயென்றும் சிறிதுகாலம்வந்து தங்கிச் செல்பவர்களுக்கு மட்டுமே உரிமையிருத்தல் கூடாதென்றும் தம் அபிப்பிராயத்தைத்தெரிவித்தார்.

மிஸ்டர் கன்னன்கரா, இந்நாட்டைத் தாய்நாடாக்கிக் கொண்ட இந்தியரே இத்தேசத்து ராஜ்ய விஷயங்களில் உரிமையுடன் கலந்துகொள்ளலாமென்று கூறினார். இந்தியர்களுக்கு முன்னர் இரட்டை ஓட்டுகள் அளித்தது பெருந்தவறென்றும் அதனால் சென்ற தேர்தலில் கலந்துகொண்ட 32,414தனித்தொகுதி ஓட்டுகளில் 12,901 தனித்தொகுதி இந்தியர்களுடையதாயிருந்தனவென்றும் அவர் குறிப்பிட்டார். மேலும் சிங்களவர்கள் சோம்பேறிகளல்லர், அன்னியநாட்டாரின் கீழிருந்து வேலைசெய்ய விரும்பாததும், தங்கள்மதம் தேசாசாரங்களின் தடையாலுமே அவர்கள் தோட்ட வேலைகளுக்குச் செல்வதில்லையென்பதும் அது காரணமாகவே அவ்வேலைக்கு வெளிநாட்டார் வரநேர்ந்ததென்பதுமே அவர்கருத்து. வருஷத்திற்கு வருஷம் வெளிநாட்டுத் தொழிலாளர் அளவுக்குமிஞ்சி குடியேறிவருவதால் இந்நாட்டவரைவிட அவர்கள் சங்கை பன்மடங்கு அதிகரித்துவிடுமாம். இங்கிலாந்துதேசம் தற்சமயம் தன்னிடம் வரும் ஜனங்களை எல்லாம் ஏற்றுக்கொண்ட போதிலும், அது இலங்கையின் நிலையிலிருந்தால் அவ்வாறு செய்யமுடியாமற் போகுமென்றும் அவர் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை காலை கூடினசபையில் மிஸ்டர் கன்னன்கரா தம்முடைய உபந்நியாசத்தை முடித்தபின் திரு. பாலசிங்கம் கமிஷனின் சிபார்சுகளில் வயதுவந்தவர் அனைவருக்கும் வாக்குரிமையளிக்க வேண்டுமென்பதை வற்புறுத்திப் பேசினார். செல்வத்திலும் கல்வியிலும் மனிதருக்குள் என்ன பேதமிருந்தபோதிலும் யாவரும் அரசியலின் ஒத்தஉரிமை யுடையவராயிருத்தல் வேண்டுமென்பது அவர் கருத்து. மாதர்களுள் 21 க்கும் 30 க்கும் உட்பட்ட வயதினரை வாக்குரிமையில்லாமற் செய்துவிடக்கூடாதென்றும், கல்வி நிபந்தனையினால் பலமாதருடைய வாக்குரிமை பறிக்கப்படுதல் கூடுமென்றும் அவர் எடுத்துக்காட்டினார். மாதர் விரும்பும் பட்சத்தில் அவர்களுக்கு ஓட்டுரிமை அளித்தாகவேண்டுமெனினும் அவர்களைத்தங்கள்வாக்கை அளிப்பதற்கு நிர்ப்பந்தம்செய்யும் எந்த இயக்கத்திலும் தாம் கலந்துகொள்ள முடியாதென்றும் அவர்கூறினார். இந்தியர் வாக்குரிமை விஷயத்தில் சாஸ்வதமான வாசமன்னியில் இங்கு அவர்கள் தங்கியிருப்பதே போதுமென்றும், அரசியலில் பிறருக்கு இடமின்றி அடைத்துவிடுதல் கூடாதென்றும், இலங்கையிலிருந்து இந்தியரை வெளியேற்றவோ, இங்கு வராமல் தடுக்கவோ முடியாத நிலையில் இலங்கையின் பூகோள அமைப்பு ஏற்பட்டிருக்கிறதென்றும், இந்தியக்கூலி இலங்கைக்கு விரோதியாயில்லாமல் உபகாரியாயிருக்கிறானென்றும் சொல்லிமுடித்தார்.

கௌரவ ஐயா பின்னர் பேசுகையில் இந்தியருடைய வாக்குரிமை எவ்விதங்களில் மறுதளிக்கப்படுகிறதென்பதை எடுத்துக்காட்டினார். இந்தியத்தொழிலாளருக்கு வாக்குரிமை அளிப்பதால் பிற்காலத்தில் அவர்கள் அரசியலில் மிகுந்த செல்வாக்குடையவர்களாய் விடுவார்கள் என்பதே சில கௌரவ அங்கத்தினருடைய கருத்து. இந்தியருக்கு உரிமையில்லாமல் செய்துவிடவேண்டுமாயின் அவர்களை இங்குவராமலே தடுத்தல் நலமென்று கௌரவ ஐயா கூறினார். “மற்றும்படிப்பு நிபந்தனையையேற்படுத்தினால் பெரும்பாலான இந்தியத்தொழிலாளிகளின் உரிமையைப் பறிப்பதற்கே அவ்வாறு செய்யவேண்டும். அதுவே செல்வி அங்கத்தினரின் நோக்கமென்றும் தெரிகிறது. தொழிலாளிகளை முன்னேற்றும் நன்னோக்கமுடையவர்கள் அவர்களுடையவாக்குரிமையையே பறித்துவிட்டால் அவர்கள் முன்னேறுவது எங்ஙனம்? தொழிலாளர் சுதந்திரரல்லரென்றும், பிறரிடம் அடிமைப்பட்டிருப்பதால் தங்கள் முதலாளிகளின் எண்ணப்படியே வாக்கை வழங்கி வருவார்கள் என்றால் துரதிர்ஷ்டமுள்ள அத்தொழிலாளரின் பந்தம் நீக்குவதுதான் எங்ஙனம்? கீழேதள்ளப்பட்டு உழன்றுவரும் அநாதியான ஜனங்களிடம் உண்மையான அன்பிருக்குமாகில் அவர்களுக்கு வாக்குரிமைகூட இல்லாமற் செய்தல் நியாயமாகுமா? இந்தியரின் சாஸ்வத வாசத்தை வற்புறுத்தினால் மேற்கொண்டு இந்தியர்களைவராமல் தடுப்பதும் இயலாது.

“வருஷந்தோறும் இந்தியர் இங்குவந்து குழுமுவது வாக்குரிமை பெறுவதற்கன்று. பொருளாதார நிலையே அவர்களை இங்குவரத்தூண்டுகின்றது. வாக்குரிமையில்லாத காரணத்தினால் இந்தியர் இங்கு வருவதை நிறுத்திவிடமாட்டார்கள். இந்தியர்க்கும் இலங்கையரைப்போன்ற சமஉரிமை அளிப்பதால் இருவருக்குள்ளும் நேசபாவமே அதிகரிக்கும். தனித்தொகுதிகளை எடுத்துவிடவேண்டுமென்று டோனமோர் கமிஷன் சிபார்சு செய்திருக்கும் இந்தச்சமயத்தில் சமூகவேற்றுமைகள் கற்பித்து இந்தியரை ஒதுக்குதல் அபாயகரமான காரியமாகும்.” என்று ஐயா மிக உருக்கமான ஓர் பிரசங்கம் செய்துமுடித்தார்.

மிஸ்டர் வில்லி பின்னர் சிறிதுபேசியபின் சபைநடவடிக்கைகள் அடுத்த வியாழக்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

# இலங்கைச் செய்திகள்.

## முத்துவாங்கிய மோசப்பிரபு

சமீபத்தில் கொழும்புநகரில் ஒருமாயப்பிரபு தன்மதிநுட்பத்தால் சில திருவிளையாடல்கள் செய்துவிட்டு மறைந்துவிட்டார். அவர் தான் ஓர் ஆங்கிலப்பிரபு என்று கூறிக்கொண்டார். இந்நகரிலுள்ள பிரபலமான இரண்டு நகைவியாபாரிகள் அவர் மோசத்திற்கு ஆளாகிவிட்டனர். சிலநாளைக்குமுன்பு அவர் ஒருபெண்பிள்ளையை அழைத்துக்கொண்டு ஒரு நகைவியாபாரியிடம் சென்று தன்னுடன் வந்திருக்கும் சீமாட்டிக்கு வேண்டிய ஆபரணங்களைக் கொடுக்கும்படி சொல்லிப்போனார். பட்டியலைத் தன் விலாசத்திற்கு அனுப்பும்படியும் கூறியிருந்தாராம். அவர் பெயருக்கு முன்னால் பிரபு இன்னாரென்று எழுதப்பட்ட ஒரு சீட்டும் கொடுக்கப்பட்டிருந்தது. பெண்பிள்ளை வேண்டிய முத்துக்களையும் நகைகளையும் பல நூறுபவுன் பெறுமானவற்றை வாங்கிக்கொண்டு சென்றாள். பின்னர் மாயப்பிரபு கொடுக்கவேண்டிய பணத்திற்கு லண்டன் பாங்கியொன்றுக்குச் செக்கெழுதிக் கொடுத்தார். வியாபாரி அதை ஒருயாத்திரைக் குழுவினரிடம் கொடுத்துப் பணம் பெற்றுவிட்டனர். செக்கைப் பெற்றுக்கொண்டவர்கள் லண்டனில் கம்பியில்லாத்தந்திமூலம் விசாரித்ததில் செக்கில் கண்டவிலாசமுடையபேர்வழி இறந்துபோய் ஐந்து வருஷமாய் விட்டது என்று தெரிந்தது. நகைவாங்கிய பெண் இதற்குள் கப்பலேறி ஆஸ்திரேலியா போய்க்கொண்டிருக்கிறாள். மாயப்பிரபு இதேமாதிரி இந்நகரில் மற்றொரு வர்த்தகரையும் ஏமாற்றியிருக்கிறார். ஆனால் அவ்வர்த்தகர் செக் போலியெனபதை அறிந்து உடனே நகைவாங்கியபெண்மணியை வரவழைத்து நகையனைத்தையும் பெற்றுக்கொண்டு செக்கை வாபஸ் செய்து விட்டாராம்.

## நாவலப்பிட்டியில் சந்தனக்கூடு

நிகழும் ஹிஜரி 1347 ஜுமாதுல் ஆகிர் தலைப்பிறையான வியாழக்கிழமை பிற்பகல் 2-மணிக்கு அலங்காரமாய்ச் செய்யப்பட்ட ரதம், பல்லக்கு, கப்பலுடன், பூச்சக்கர ஆலவட்டம், சிலம்பவிளையாட்டு, தயரு முழக்கத்துடன் ஊர்பவனிவந்து நாவலப்பிட்டியில் ஆறரைமணிக்குக் கொடியேற்று திருவிழா நடைபெறும். பிறை 10 உ சந்தனக்கூட்டு ஊர்வலம் நடைபெறுமென்று ஷையூர் முஸ்லீம் சமாதானிய சங்கத்தலைவர் அறிவிக்கிறார்.

## உணவு--மருந்துச் சட்டம்

சென்ற 7-ம் உ கூடிய கொழும்புநகரபரிபாலன சங்கத்தில் டாக்டர் எஸ். முத்தையா, இங்கு வெளிநாடுகளிலிருந்து அளவில்லாத மருந்துச்சாமான்களும், உணவுப்பொருள்களும், புலாலுணவுகளும் இறக்குமதி செய்யப்படுவதை யுத்தேசித்து அவற்றைத் தடைசெய்வதற்கு ஒருசட்டம் இயற்றவேண்டியதன் அவசியத்தைப் பற்றித்தலைவரின் அபிப்பிராயம் யாதெனக் கேட்டார். தலைவர் தமக்கும் அதே எண்ணமென்றும் ஆனால் அரசாங்கத்தாருக்கு அதைச்செய்ய மனமில்லையென்றும் தெளிவாய் எடுத்துக் காட்டினார். பழைய தலைவர்களிற் பலரும் இதே அபிப்பிராயத்தைக் கொண்டு துரைத்தனத்தாரை வேண்டியும், அவர்கள் புதிய சட்டம் ஏற்படுத்த ஆலோசனைசெய்து வருவதாயும் பொருளிடைஞ்சலிருப்பதால் இயலவில்லையென்றும்சொல்லி காலத்தைக் கடத்திவிட்டனர். இப்பொழுதுள்ள தலைவர் மீண்டும் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

## போட்டிப் பந்தயவரி.

கொழும்பு நகரசபையார் சென்ற புதன்கிழமைக் கூட்டத்தில் நகரில் குதிரைப் போட்டி முதலியவிளையாட்டுகளில் பந்தயம் கூறுவதற்கு வரி விதிக்கவேண்டியதற்கு அரசாங்கத்தார் அனுமதி கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றனர். தீர்மானத்தைப்பிரேரேபித்தமிஸ்டர் பண்டாரநாயக, தற்போது அரசாங்கத்தார் நியமித்த தனிக்கமிட்டியாரே வரிவிதிக்க அநுசரணையாகக் கூறியிருக்கும் பொழுது தங்கள் தீர்மானத்தை மறுக்க அவசியமில்லையென்றும், முனிசிபல் சபைக்கு ஆரம்பகல்வி முதலான விஷயங்களில் அதிகசெலவு செய்யவேண்டியிருப்பதாலும், போதிய பணமின்மையாலும், விளையாட்டிடம் நகரஎல்லைக்குள்ளே அமைக்கப்பட்டு அங்கு செல்ல ஜனங்களுக்குநல்ல ரஸ்தாக்கள் முதலியசௌகரியங்கள் செய்யப்பட்டிருப்பதால் வரி விதிப்பது தகுமென்றும் எடுத்துக்காட்டினார். பந்தயவரி வருமானத்தால் சபைக்குப் பெரிய லாபமென்றும் அவர்கூறினார்.

## இறக்குமதித் தடை

தற்போது இலங்கையிலுள்ள கால்நடைகளுக்குள் கோமாரிஎன்னும் தொத்துநோய் விடாது பரவிவருவதால் வருகிற ஜனவரிமாதம்முதல் இந்தியாவிலிருந்து உண்பதற்காகக் கொண்டுவரப்படும் கால்நடைகளைத் தடைசெய்துவிட வேண்டுமென்றும் அடுத்த எப்ரில்முதல் அங்கிருந்துவரும்பால் மாடுகளையும் நிறுத்திவிட வேண்டுமென்றும் அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கின்றனர். விரைவில் இதுவிஷயமாக வேண்டிய சட்டம் செய்யப்படும். சென்ற ஆண்டில் இந்தியாவிலிருந்து அறுப்பதற்காக 6, 416 கால்நடைகள் வந்தன. அதாவது இங்கு அடிக்கப்பட்டவற்றுள் 100 க்கு இரண்டேகால் இந்தியாவிலிருந்து வந்தவை. சென்றஆண்டில் இந்தியாவிலிருந்து வந்தமொத்தம் ஆடுமாடுகளின் தொகை 7, 923.

## வடமத்தியமாகாணத்தில் பஞ்சம்.

வடமத்திய மகாணத்தில் முக்கியமாக நுவரகம் பலடாமுதலிய விடங்களில் மிகுந்த பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதாம். இவ்வாண்டு அப்பக்கத்தில் எவ்விதப்பயிரும் செய்யப்படாமல் நிலங்கள் தரிசாய்க் கிடக்கின்றன. அங்கே ஏராளமான பெரியகுளங்கள் இருந்தபோதிலும் அவற்றில்போதிய தண்ணீர் பெருகாததால் மற்றச்சிறு குளங்களுக்கும் தண்ணீர் போகவில்லை. மழையும் காலத்திற் பெய்யாது விவசாயம் பாழ்பட்டுவிட்டது. ஜனங்கள் பலர்காட்டுப் புறங்களுக்குச்சென்று அங்குள்ள காய்கனிகளையும் காளான்களையும் புசித்துவருகின்றனர். வெகுதுரிதமாக அரசாங்கத்தார் அங்கு போதிய உதவி செய்ய வேண்டியிருக்கிறது. விவசாயத்திற்குவேண்டிய கேப்பையும் நெல்விதையும் ஜனங்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். பஞ்சத்தின் கொடுமைநுவரகம் பலாவிலே அதிகம்.

## முஸ்லீம் விவாகச்சட்டம்.

நவம்பர் 8-ம் தேதி கூடிய சட்டசபையில் தற்கால அட்டர்னி ஜெனரலான மிஸ்டர் எம். டி. அக்பர் முஸ்லீம் விவாகச்சட்டத்தை இரண்டா முறையாகப்படித்து அதற்கென ஏற்பட்டிருக்கும் தனிக்கமிட்டியாரின் ஆலோசனைக்கு விடவேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியது. இச்சட்டம் இலங்கைக்குப் புதியதேயன்றி முஸ்லீம்களுக்குப்புதியதல்லவென்று அவர் வாதித்தார். இலங்கைத் தீவில்வைத்து நடக்கும் முஸ்லீம் விவாகம், விவாகரத்துச் செய்தல் என்பவற்றை ரிஜிஸ்டர் செய்வதற்கே இச்சட்டம் தோன்றியுள்ளது. இச்சட்டத்தின்படி ரிஜிஸ்டர் செய்யப்படாத விவாகங்கள்ரத்துச்செய்யப்படமாட்டா. ஆனால்மணமகன், குரு, இரண்டு சாக்ஷிகள், பெண்ணின் போஷகர் இவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் மசூதிகளில் மணம்செய்துவைக்கும் குருமார்களே பெரும்பான்மையாகரிஜிஸ்டர்செய்ய நியமிக்கப்பட்டு லைசென்ஸ் அளிக்கப்படுவார்கள், விவாகத்தின் பொழுதோ, அதற்கு முந்தியோ. அவர்கள் மணமகனிடமிருந்து அவன் ஊர், பெயர், முன்னர் விவாகமாயிருக்கிறதா என்பன போன்ற விஷயங்களை எழுதி வாங்கவேண்டும். மற்றும் விவகாரத்துக்கு வேண்டிய பலபுதிய திருத்தங்களும் ,இச்சட்டத்தில் அடங்கியுள்ளன.

---

# அமுத மொழிகள்.

—(0)—

திரு. எஸ். ஸ்ரீனிவாஸய்யங்கார்:— இந்தியாவில் ஐம்பதுவயதுக்கு மேற்பட்ட அரசியல் தலைவரே இருக்கக்கூடாது. வாலிபர் கூட்டமும் காங்கிரஸை பெரும் சக்தி வாய்ந்திருக்கும். எனக்கு வயது 54 ஆகிறதால் ராஜீயத்திற்கு வெளியே நான்சென்றுவிடவேண்டுமென்று உணருகின்றேன்.

டாக்டர் அன்னிபெஸன்ட்:— உண்மையான சுதந்திரம் ராஜ்யங்களென்றும் ஏகாதிபத்தியங்களென்றும் சொல்லப்படும் அரசாங்கங்களிலிருந்து உண்டாவதில்லை. அதன் சக்தியும் பயனும் அவற்றைப் பொருத்திருக்கவுமில்லை. ஆனால் எத்தேசத்தில் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொதுஜன அபிப்பிராயத்தைத் தழுவி ஆட்சி புரிகின்றனரோ அந்நாட்டில் ஸ்திரமாக அமைக்கப்பட்டுள்ள ஸ்தாபனங்களினால்தான் சுதந்திரம் காக்கப்படுகிறது.

மேற்படியார்:— இந்தியாஎன்றும் எளிமையில் இருந்ததில்லை; என்றும் அடிமையாகவுமில்லை. வியாபாரக்கும்பெனியக் வந்து வர்த்தகப்போர் செய்தும், அரசாங்க அரசா விரோத மூட்டியும், ஜனசமூகத்தில் கலவரத்தை ஏற்படுத்தியும் உலகத மிருகபலத்தால் [illegible] தங்கள் கடைசி ஏகாதிபத்யத்தை அமைத்துக் கொண்டதால் வறுமையும் அடிமைத்தனமும் இந்தியாவைப்பற்றிக் கொண்டன

மெற்படியார் :— இந்தியா உலகத்திற்கு அளிக்கவேண்டிய செய்தி இருக்கிறது அதை முழுதும் அளிப்பதற்கு முதலில் இந்தியா— அதிலிருக்கும் ஒவ்வொருபாகமும் உட்பட— விடுதலைபெற்றுத் தன்னரசுபுரிதல்வேண்டும்.

டாக்டர் கிச்லூ:— நமது தேசத்தின் எதிர்கால நன்மையை உத்தேசித்து ஹிந்து மகாசபை, முஸ்லீம்லீக் போன்ற வகுப்புச் சபைகளோ அன்றிராஜீயசபைகளோ இருக்க இடமில்லை. வகுப்பு ஸ்தாபனங்கள் நாளடைவில் இறந்துபடுமென்பது நிச்சயம். அரசியல் வேற்றுமைகளை அடிப்படையாகக் கொண்ட கட்சிகளே நாட்டில்இருக்கும். யாவரும் இந்தஉண்மையை விரைவில் உணரவேண்டும்.

டாக்டர் அருண்டேல்:— கல்வியின் லட்சியம் ஒருகனவுபோலாகும். தற்சமயம் நாம் இக்கனவை நினைவிலும் அடையக்கூடுமென்றுதான் எதிர் பார்க்கக்கூடும். ஆயினும் அக்கனவைக்கண்டு தீரவேண்டுமென்று அவா நமக்கிருக்கவேண்டுவது அவசியம்.

மிஸஸ் சாரதாமேட்டா:— குடிகள்கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பணத்தை விரையம்செய்ய எந்த அரசாங்கத்திற்கும் உரிமையில்லை.

ஸ்ரீமதி சரோஜினிதேவி:— இந்தியா எப்பொழுதுமே குறுகிய நோக்கத்துடன் வாழ்ந்ததில்லை. இந்தியா தன்கணவாய்களையும் நதிகளையும் பாதுகாப்பின்றி எப்பொழுதும் திறந்து விட்டிருக்கின்றது. யாரெப்படிவரினும் தன் ஆத்மாவை ஒன்றும் செய்ய இயலாதென்பதை உணர்ந்து இந்தியா யாவரையும் வரவேற்கின்றது.

இலங்கை கவர்னர்(ராயல் காலேஜ் பரிசளிப்பு விழாவில்) :— நான் எந்தப்பள்ளிக்கூடத்திற்குச் சென்றாலும் அங்கு இலங்கையின் பூர்வசரித்திரமும், சிங்களம் தமிழ் முதலியபாஷைகளும் எவ்வளவு கற்பிக்கப்படுகின்றன என்பதை முதற்கண் விசாரிக்கிறேன். நான்பார்த்ததில் பண்டைப்பழக்கவழக்கங்களிலும் பாஷைகளிலும் வெறுப்பு ஏற்பட்டுவருவது தெரிகின்றது. ஆனால் நாளடைவில் இந்தக்கவனக்குறைவொழிந்து, இலங்கையின் பண்டைச்சரித்திரமும் பழையமொழிகளும் போதிக்கப்படுவதோடு முக்கியமாக தற்காலம் வழங்கிவரும் புதியமொழியும் கற்றுக் கொடுக்கப்படுமென்று நம்புகிறேன்.

---

# தீபாவளி.

பண்டைக்காலமுதல் ஹிந்துக்கள்உலகத்தின் எந்தப்பாகத்தில் வசித்துவந்தபோதிலும் தீபாவளிப் பண்டிகையை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றனர். இப்பண்டிகையின் வரலாற்றைப் பற்றிப்பலர் பலவிதமாய்க் கூறுவர். கிருஷ்ணபகவான் நரகாசுரனை வதைத்தநாளில் அன்னான் வேண்டுகோளுக்கிணங்கிப் பாம்பின்மேல் நின்றாடிய பரமன் அத்தினத்தை யாவரும் கொண்டாடும்படி விதித்தனன் என்பர் சிலர். மற்றும்சிலர் திருமால் மகாபலியிடம் மூன்றடி மண்வேண்டி அன்னான் உரத்தை அமிழ்த்துப் பாதாளம் அனுப்பியகதையைத் தீபாவளியின் காரணமாகக்கூறுவர். எப்படியாயினும் இப்பழம் பெரும் பண்டிகை மக்கள் அல்லற்பட்டு ஆற்றாது அழுதுதவிக்கும்படியான முறையில் மறக்கொடும் பாவம் உலகில் தாண்டவமாடும்பொழுது ஏழைபங்காளனான பரம்பொருள் உருப்பெற்று அவதரித்து மறத்தை அழித்து, நல்லோர் துயர்துடைத்து, தர்மஸ்தாபனம் செய்வார் என்ற பேருண்மையை விலகாட்டுகின்றது.

தீபாவளியன்று ஹிந்துக்கள் விடுதலைப்பட்ட கைதிகள்போல் துள்ளிக்குதிக்கின்றனர். ஸ்நானமும், பானமும், ஊணும், உடையும் அன்று அவர்களைப்பற்றிக் கொள்ளுகின்றன. அத்தினம் இன்பநுகர்ச்சிக்கு ஏற்பட்டதாகவே பலர் எண்ணி ஒழுகுகின்றனர். அன்று உடைகள் காரணமாக இலட்சக்கணக்கானரூபாய் வெளிநாடு போகின்றது. தற்காலத் தீபாவளிபணச்செலவுக்கும், பெருந்தீனிக்கும், மறத்திற்கும் காரமாயிருக்கிறது. அன்றியும் சீனத்துவெடிகளுக்காகப்போகும் பொருளுக்குத்தான் அளவுண்டோ? நாட்டுமக்கள் வெள்ளத்திலும், பஞ்சத்திலும், நோயிலும், அடிப்பட்டுத் துடித்துக்கொண்டிருக்குங் காலத்தில் யாருக்கும் எவ்விதபயனும் விளையாத வெடிகளுக்கு லட்சக்கணக்கான பொருளை வீணே கொட்டுவதில் பயன்என்ன? ஆயினும் வெடிகளின் ஓசையால் ஏழைகளின் அழுகுரல் சிறிது காதில்படாது தடைப்படக்கூடும். வேறுயாது பயனுண்டு? சைனாவில் பண்டிகைதோறும் வெடிசுடுவது தொன்று தொட்டவழக்கம். நம்மை இச்சனியன்எப்படிப் பிடித்துக் கொண்டதோ தெரியவில்லை.

தீபாவளியன்று புதியஆடைகள் வாங்குவதில் பெரும்பணம் அயல்நாட்டாருக்கே போய்ச் சேருகின்றது. சிலகாலத்துக்குமுன் ஆப்கன் அமீர் தம்பிரஜைகளுக்கு உபதேசம் செய்கையில், "நீங்கள் வெளிநாட்டாருக்கு அனுப்பும் பணமெல்லாம் பின்னர் உங்களுக்கே வெடிகுண்டாகத் திரும்பிவரும்" என்றுகூறினார். இதன் உண்மையை நம்மவர் இன்னும் உணரவில்லை. பண்டிகை யென்றால் பற்பல பண்டங்கள்செய்து அன்று முழுதும் வயிற்றப்பதேவருக்கே பூஜை செய்யவேண்டு மென்றுவிதி? இதையே பலரும் விதியெனக் கடைப்பிடித்து வருகின்றனர். சுருங்கக்கூறின் தீபாவளியன்று நம்சிறுவர் வெடிசுட்டுக் கையைக் கெடுத்துக் கொள்ளுகின்றனர், மற்றவர் மிதமிஞ்சி உண்டு வயிற்றைக் கெடுத்துக்கொள்ளுகின்றனர்: பெரும்பாலர் ஆடம்பரத்தால் ஆத்ம வளர்ச்சியைக்கெடுத்துக்கொள்ளுகின்றனர். இவ்வாறின்றி தீபாவளிஎங்கும் நிறைந்தபரம்பொருளின் அருளை நமக்கு ஞாபகப்படுத்த வேண்டும். நாம் அதற்கு முந்திய தினம் இருந்ததைவிட அன்றுமுதல் சற்றுமேம்பட்ட மனிதராகவேண்டும். உலகில் மறம் அழிந்து, தர்மம் செழித்து இறைவன் அருள் ஓங்கவேண்டுமென்று நாம் அன்று கடவுளைத்துதித்து வேண்டவேண்டும். திருமால் அரக்கர்களை அழிக்க அவதரித்தபொழுது, தர்மம் தன் மர்மஸ்தானத்தில் காலூன்றிநின்ற மறக்கொடும் பாவம் அழிக்கப்பட்டுவிடுமென்று களிப்படைந்தது. இப்பொழு தீவாவளி வருவதை யெண்ணித்தரும தேவதை இரங்கியேங்க வேண்டியிருக்கிறது. இனியாவது இந்நிலை விரைவில் மாறவேண்டும். மக்கள் மனநிலை மாறவேண்டும். தனிப்பட்டவர்கள் தம்மால் என்னசெய்ய முடியுமென்று நினைக்கவேண்டாம். நம்மில் ஒவ்வொருவரும் தீபாவளி போன்ற புண்ணியநாளில் இதயத்தைச் சூழ்ந்திருக்கும் அறியாமை, கொடுமை முதலிய பாவயிருளை நீக்கமுயலவேண்டும். "உலகில்ஒருவன் கண்யமாய் நடந்துவர ஆரம்பித்தால் அம்மட்டிற்கு ஒரு அயோக்யன் குறைந்தான்".

## முக்கிய அறிவிப்பு.

இதுவரை ஐந்து சதமாக விற்றுவந்த நமது 'இலங்கை இந்தியன்' இம்மாதம் 21-உ முதல் ஆறுசதமாக விற்கப்படும். பத்திரிகை வழக்கம்போல் சில்லரை விற்பனைக்குரிய விடங்களில் கிடைக்கும்.

காரியஸ்தர்.
'இலங்கை இந்தியன்'

## இலங்கை இந்தியன்.
1928-ஞு நவம்பர் மீ 14 உ

### முடிவில்லாத விவாதம்.

நமது சட்டசபையில் சீர்திருத்தத்தைப்பற்றிய விவாதம் இன்னும் முடிந்தபாடில்லை. சென்றவாரத்தில் இரண்டு தினங்கள் விவாதத்தில் கழிக்கப்பட்டும் ஒருவிதமுடிவுமில்லாது சபைகலைந்துவிட்டது. கௌரவ அங்கத்தினர்கள் தங்கள் நிலைமையை விளக்கிக்காட்டுவதற்கே பெரும்பாகமான காலத்தைக்கழித்துவிட்டனர். விவாதம் நம்மவர்க்கு எவ்விதமான புத்தறிவும் புகட்டவில்லை. அங்கத்தினர்க்கே பயன் பட்டிருத்தல் கூடும். இந்தியத்தொழிலாளருக்கு வாக்குரிமை வழங்கும்சிக்கலானபிரச்னையே பெரிதும் விவாதிக்கப்பட்டது. சிங்கள அரசியல் வாதிகள் இந்தியர்வாக்குரிமையால் பெரிதும் நஷ்டம் ஏற்படுமென்று முன்னதாகவே அதைஅணைகோலித்தடுக்கத் தங்கள் திறமையனைத்தையும் செலவழிக்கின்றனர்.

இந்தவிவாதத்திற்கு முதற்காரணம் கமிஷனர்களேயாகும். அவர்கள் ஐந்துவருஷம் இந்நாட்டில் தங்கிய இந்தியத்தொழிலாளர்க்கே வாக்குரிமை நல்கவேண்டுமென்று செய்த சிபார்சே இத்தகைய பேதபுத்திக்கு அடிப்படையாயிருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைச்சார்ந்து வாழும் இந்தியர் விஷயமாக இலங்கையில் சாஸ்வதமாகக் குடியிருக்கவேண்டுமென்ற பிரச்னை எழுவேண்டிய அவசியமேயில்லையென்று திரு.பாலசிங்கம் கூறியது மிகப்பொருத்தமாகும். ஒரே ஏகாதிபத்தியத்தில் சேர்ந்திராது புறம்பாயுள்ள நாட்டாருக்கே இத்தகைய விஷயங்களைப்பற்றித்தடை செய்யவேண்டும். இங்கிலாந்தில் ஆறுமாதம் தங்கும் எல்லா பிரிட்டிஷ் குடிகளுக்கும் வாக்குரிமை அளிக்கப்படுகிறது. அதேதனிநிகம் இலங்கைக்கு ஏற்காதென்று சில கௌரவ அங்கத்தினர் கூறுகின்றனர். ஏனெனில் அங்கு இந்தியத்தொழிலாளர் பிரச்னை ஏற்படவில்லையாம்.

ஈண்டுப்பிழைப்பைக்கருதி வந்திறங்கும் குற்றம் இந்தியத்தொழிலாளருடையதன்று. எங்கு தொழில்கிடைக்குமோ அங்கு தொழிலாளர் செல்வது இயற்கையேயாகும். தண்ணீர் மேட்டு நிலத்திலிருந்து பள்ளம் நோக்கிச்செல்வது சாதாரணமான உண்மையல்லவா? அதில் பிழை ஏதுமுளதோ? மேலும் அரசாங்கத்திற்கு இந்தியர் மூலம்கிடைக்கும் வரிகளில் ஏதும் குறையுண்டா? வரிசெலுத்துவதற்கு முன் பிரதிநிதித்வம் வேண்டுமென்பதே விதி. ஐந்து வருஷ நிபந்தனையை இந்தியர்மீது சுமத்தினால் அவர்களிற்பெரும்பாலர் வாக்குரிமைக்கு அருகராயில்லாது போய்விடுவர் என்பதைநாம் பன்முறை எடுத்துக்காட்டியிருக்கிறோம். இலங்கையில் ஸ்திரமான வாசம்வேண்டும் என்று விதிக்கப்படுமானால் 100-க்கு 99-இந்தியத்தொழிலாளர் வாக்குரிமையிழந்து நிற்பர். அதன்பின்னர் சிங்கள (தோட்டக்கார) ராஜதந்திரிகள் இந்தியர் ஒதுக்கப்பட்டுவிட்டதால் ஏற்படும் பெரும் பயனைத் தேர்தலில் அனுபவிப்பதோடு அவர்கள் நெற்றிவேர்வை நிலத்தில் விழப்பாடுபடும்பயனையும் பெறுவர். இந்திய அரசாங்கப்பிரதிநிதியான மிஸ்டர் ஹைதரி நிலையை நன்கறிந்து, சிங்களதோட்டக்கார ராஜதந்திரிகளின் மனநிலையை உணர்ந்து, காரியம் முடிவடைவதற்கு முன்னர்இந்திய அரசாங்கத்தாரைவேண்டும்முன்னேற்பாடுசெய்யத் தூண்டுவாரென்று நம்புகிறோம்.

கமிஷனர்கள் இந்தியர்க்குரிமை மறுக்கமுதலில் ஒருபிதிர்போட்டுச்சென்றனர். அதுபோதாதென்று தோட்டக்கார ராஜதந்திரிகள் இந்தியர் வாக்குரிமை விஷயத்தில் பெரும்பிடிவாதத்தோடு மறுத்து நிற்கின்றனர். ஒருமாது பிச்சைக்கு வந்த ஒருவனைத் தன் மருமகள் இல்லையென்றுபோகச்செய்ததைத் தடுத்துத்தானே அதற்குரியவளென்று அவ்வேழையைப்பார்த்து "நான் அதிகாரத்துடன் சொல்லுகிறேன். உனக்குப் பிச்சையில்லை" என்று சொன்னாளாம். இதுபழங்கதை. சட்டசபைவிவாதமும் இதை ஒத்திருக்கிறது. இந்தியர் பிச்சை கேட்கவில்லை, தயவை நாடவில்லை; ஆனால் தாங்கள் மற்றையோருடன் இன்பதுன்பங்களை அனுபவித்து, வேண்டும் வரிகள்செலுத்தி, இத்தீவின் செழிப்பிற்குக் காரணமாக வாழ்ந்துவருவதால் இலங்கையில் தங்கள் உரிமையையேவேண்டுகின்றனர்.

---

### விஷக்காற்று.

பஞ்சாபிய வீரசிங்கமான லாலா லஜபதிராய் அவர்கள் சைமன் குழு பகிஷ்கார ஊர்வல மொன்றில் சென்றதற்காகத் தாக்கப்பட்டுக் காயமடைந்த செய்தி இதற்குள் உலகமெங்கணும் பரவிவிட்டது. லாகூர் போலீஸார் லஜ்லாஜியிடம் எவ்வித குற்றம் கண்டனர். என்பது நமக்குப்புலனாகவில்லை. லஜபதி மிகுந்ததேசப்பற்றுடையவர். இலக்ஷக்கணக்கான இந்தியருடைய நன்மதிப்பைப் பெற்றவர்; நாட்டிற்காகதனது உரிமையெல்லாம் துறந்து போராடிவரும் பெரியார். தேசியம் அவரதுஉயிர்நிலை, அரசியலும் போராட்டமும் அவரது மூச்சுப்பைகள். இவைகளே அவருடைய குற்றங்களாகும்.

தேசத்திற்காக உழைத்தும், நாடுகடத்தப்பட்டும் நலிந்துபோன அவருடைய முதிர்ந்த சரீரம் லாகூர்போலீஸாரின் தடிகளுக்கு இலக்காக நேர்ந்தது ஆச்சரியமில்லை. அதிகாரவர்க்கம் பொறுப்பற்ற முறையில் நாட்டார் போற்றும் ஒருபெரியாரை இவ்வாறு அவலப்படுத்தியும், தடியால் அடித்தும் துன்புறுத்தியும் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றத் துணிகின்றனர். உண்மையில் லஜபதி "அடியுண்டது அவருக்கே வெற்றி; அவர் சார்ந்துள்ள இயக்கத்திற்கே வெற்றி. போலீஸார் தங்கடமையை உணராது அதிக்கிரமித்து நடந்துகொண்டது வேலியே பயிரை அழித்ததாகும். போலீஸாரின் பொறுப்பற்ற செய்கையால் லாகூர் பகிஷ்கார இயக்கத்தில் வெற்றியடைந்ததோடு மற்ற நகரங்களுக்கும் வழிகாட்டியாக நேர்ந்தது. இனியாவது கமிஷனுடன் ஒத்துழைக்க முன்வந்து நிற்கும் இந்திய சீமான்களுக்கு நல்லபுத்தியுண்டாகுமென்று நம்புகிறோம். அதிகாரவர்க்கத்தார் உண்மையானதேசியத்தை இழிவானமுறையில் இவ்வாறு அழிக்கமுயல்வது யுத்தவீரர் எதிரிகள்மீது விஷக்காற்று வீசச்செய்வதற்குத் தாங்கள் முதலில் அதை உட்கொண்டுசெல்வதை ஒக்கும். லாகூர் வாழ்க! அதன்போலீஸ் அமுல் நிரந்தரம் வாழ்க!!

### காங்கிரசும் பூர்ணசுயேச்சையும்.

சென்னையில் கூடிய அகிலஇந்தியதேசிய காங்கிரஸ் தன் கோரிக்கை பூர்ணசுயேச்சை என்பதை வெளியிட்டநாள்முதல் தலைவர்களுக்குள் பற்பலபேதங்கள் ஏற்பட்டு வளர்ந்து வருகின்றன. காங்கிரஸ் தீர்மானத்தின் பொருளையே பலர்திரித்து வியாக்யானம் செய்கின்றனர். இந்நிலையில் நேருகமிட்டி யாதாஸ்தும் வெளியிடப்பட்டது. அதன் குறிக்கோள் குடியேற்ற நாட்டு அந்தஸ்த்துப் போதுமென்பதே. சமீபத்தில் லாகூரில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பூர்ண சுயேச்சையே — பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் எவ்விதசம்பந்தமும் இல்லாத சுயேச்சையே வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறது. முன்னர் மகாத்மாஜி ஆமதாபாத் காங்கிரஸில் சுயராஜ்யத்தைப்பற்றித் தம்வியாக்யானத்தைக் கூறும்பொழுது "சுயராஜ்யம் என்பது கூடுமானால் பிரிட்டிஷ் சாமராஜ்யத்திற்குள்ளும், அவசியமானால் அதற்கு வெளியிலும்" என்று கூறினார், நாளுக்குநாள் தேசத்தில் நடந்துவருங்காரியங்களிலிருந்து வாலிபர்கள் மனமுடைந்து பூர்ணசுயேச்சையை நாடுகின்றனர். வயோதிகர் குடியேற்ற நாட்டு அந்தஸ்த்தில் திருப்திகொள்ளுகின்றனர். அகிலஇந்திய காங்கிரஸ கமிட்டி ஏகோபித்து இதுவிஷயமாய் தீர்மானித்திருந்தபோதிலும், காங்கிரஸ் மகாசபை மகா ஜனங்களின் அபிப்பிராயத்தை ஒருங்குசேர்த்து வெளியிடமட்டும் ஏற்படவில்லை— பொதுஜன அபிப்பிராயத்தை நல்லமுறையில் ஏற்படுத்த வேண்டிய பொறுப்பும் அதற்கேயுள்ளது என்பதை உணரவில்லை. தேசயனைத்தும் விரும்பி உழைக்கும் ஒருகுறிக்கோள், மாசற்ற மனமுடைய ஓர்பெருந் தலைவர், தியாகத்தில் களிப்பெய்தும் உண்மை ஊழியர்கள் இவையே நமக்குத்தேவை. எல்லாவற்றிற்கும் காங்கிரசல்லவா வழிகாட்ட வேண்டும்!

### புதிய ஆப்கனிஸ்தானம்.

மேன்மைதங்கிய ஆப்கன் அமீர் அமானுல்லாகான் மேல்நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டுத் தற்காலம் தமது நாட்டில் பற்பல சீர்திருத்தங்கள் செய்துவருகிறார். அவர் முதலாவது தம்நாட்டை அடிமை நிலையிலிருந்து விடுதலைபெறச் செய்து இப்பொழுது நாட்டை வருத்திவரும் மூடநம்பிக்கைகளையும் குருட்டு வழக்கங்களையும் தகர்ப்பதற்கு முயன்று வருகிறார். அவருடைய ஆட்சியிலிருந்து குடிகளைத்தழுவிக் கோலோச்சும் ஒருமன்னன் ஆட்சியால் ஒரு சுதந்திரநாடு எவ்வளவு முன்னேறக் கூடுமென்பது தெரிகின்றது.

அமீர் ஒருநாட்டின் 'செல்வமும்' ஆக்கமும் அதன் வாலிபர் கையில்தான் இருக்கின்றன என்பது உணர்ந்து ஆப்கன் வாலிபர் பலரை ஐரோப்பாவில் கல்விபயின்றுவர அனுப்பியிருக்கிறார். வாலிபரனைவர்க்கும் யுத்தப்பயிற்சி அவசியமாகக் கற்பிக்க ஏற்பாடு செய்திருக்கிறார். தம் நாட்டில் மாதரை இழிவுசெய்யும் துரியாமையை அடியோடு அழித்துவிட முயன்றுவருகிறார். ஆயினும் எந்தநாட்டின் முற்போக்கிற்கும் தடைகள் ஏற்படுமல்லவா? அமீர் பழைய நிலையை முற்றிலும் மாற்றி ஆப்கானிஸ்தானத்தைப் புனருத்தாரணம்செய்யமுயல்வதை அந்நாட்டு வைதிகர்களான முல்லாக்கள் தடைசெய்து வருகிறார்கள். இப்பொழுது முல்லாக்களின் தொல்லை அதிகமாயிருப்பதாக 'பயனீர்' பத்திரிகை கூறுகின்றது. ஆனால் அமீர் வயோதிகர் பிதற்றலையும், வைதிகர் மறுப்பையும் கண்டு அஞ்சுபவரல்லர் என்பது முன் நிகழ்ச்சிகளிலிருந்து உலகம் அறிந்துகொண்டிருக்கின்றது. பழைய அமீர்களுடைய முடிகாற்றிலடிபடும் குடுக்கைபோல் ஆடிக்கொண்டிருந்தது. அமானுல்லாவோ வணங்காமுடியா மன்னராய்விளங்குகின்றார். குடிகளில் வாலிபர் அனைவரும் அவர்பால் மிகுந்தபற்றுக் கொண்டிருக்கின்றனர். 'அடிமைதான் அடிமைப்பட்ட முதல்நாளே தனது ஆண்மையில் பாதியை இழந்து விடுகிறான்' என்றொரு கிரேக்க கவி கூறியிருக்கிறார். இதை நாம் இந்தியாவில் பார்க்கிறோம். நவீன ஆப்கானிஸ்தானத்திலோ, 'சுதந்திரன் தான் சுதந்திரம் பெற்றஅன்றே தான் இழந்த ஆண்மையை முழுதும் பெற்று விடுகிறான்' என்ற உண்மை காணப்படுகிறது.

### ஐக்கியமாகாணத் தலைவர்.

அமெரிக்கா ஐக்கியமாகாணத்திற்குத் தலைவராக மிஸ்டர் ஹெர்பர்ட் ஹூவர் பெரும்பாலான ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இவர் அமெரிக்காவிலுள்ள பிரபலஸ்தர்களில் முக்கியமானவர்; பிராடெஸ்டென்ட் கிறிஸ்தவர். முதலில் இவர்பத்திரிகை விற்கும் தொழிலிலிருந்து, பின்னர் சைனா முதலான விடங்களில் சுரங்கங்களில் வேலை செய்து இப்பொழுது ஐக்கியமாகாண அதிபதியாய் விளங்குகிறார்.

### தங்கக்கையும் இரும்புக்காலும்.

மிஸ்டர் ஹூவருக்கு எதிராகநின்றவர் கத்தோலிக் கிறிஸ்தவரான மிஸ்டர் ஸ்மித் என்பார். இவ்விருவர்களுக்குமாக தேர்தலில் செலவழிக்கபபட்டபொருள்சுமார் இரண்டரைக் கோடியிருக்குமாம்! ஐக்கியமாகாணத்தில் அபேக்ஷகர் தன்னைத் தேர்ந்தெடுக்கும்படி ஒவ்வொரு ஓட்டருக்கும் ஒருகடிதம் அனுப்ப வேண்டுமென்றால்90 லக்ஷம் ரூபாயாகுமாம்! என்னே டாலரின் சக்தி! இந்திய நியாயஸ்தலங்களில் நீதிபெற வேண்டுமானால் தங்கக்கையும் இரும்புக்காலும் வேண்டுமென்று மௌலானா முகம்மதலி கூறுவது வழக்கம். அதாவது தபேதார், வேலைக்காரர், வக்கீல் முதலியவர்களுக்கு அள்ளிக்கொடுக்கக் கணக்கற்ற திரவியமும், வாய்தாத் தோறும் அலைவதற்கு இரும்புக்காலும் வேண்டுமென்று பொருள். இப்பொழுது தேர்தலுக்கு மிகுந்தபணமும், வாக்காளர் வீட்டுக்கு அலைவதற்கு இரும்புக்காலும் வேண்டியிருக்கிறது. ஆனால் அமெரிக்காவில் வாக்காளரிடம் அலையவேண்டியதில்லை. தேர்தலுக்கு நிற்பவர்கள் குறிப்பிட்ட விடங்களில் செய்யும் பிரசங்கங்கள் வெளியிடங்களில் தொலையிலிருப்பவர்களுக்கெல்லாம் 'ரேடியோ' இயந்திரத்தின் மூலம் கேட்கின்றன. அமெரிக்கா ஐக்கியமாகாணம் குபேர ராஜ்மாயிருந்தபோதிலும் அங்கு நடக்கும் தேர்தல் செலவு அபரிமிதமாயிருக்கிறதல்லவா?

---

### பள்ளிகளில் சங்கீதம்.

இலங்கைப்பள்ளிக்கூடங்களில் சங்கீதத்தைப் பாடமாக வைப்பதைப் பற்றிபோதனாமுறைக்ககமிட்டியார் (விலபஸ் கமிட்டி 1923-ம் வருஷம் வரை ஆலோசனைசெய்து வந்தனர். அதுவிஷயமான விசாரணைகள் 1926-ல் முடிவடைந்தன. ஒருதிட்டமும் தயாரிக்கப்பட்டது. இப்பொழுது அத்திட்டம் திருத்தப்பட்டு ஆங்கிலத்திலும், தமிழிலும், சிங்களத்திலும் அதுவிஷயமான பாடப்புத்தகங்கள் அச்சிட்டு வரப்படுகின்றன. தற்சமயம் ஆங்கிலப்பள்ளிகளில் சங்கீதம் கற்பிக்க வேண்டிய உபாத்தியாயர்கள்கிடைப்பதால் பாடம் நடந்து வருகிறது. தேசபாஷைப்பள்ளிக்கூடங்களுக்கும் வேண்டியஅளவு சங்கீதமுறை கற்பிக்கப்பட்ட உபாத்தியாயர்கள் விரைவில் ஏற்படுத்தப்படுவார்களென்று நம்புகிறோம்.

# மத்திய மாகாண இந்திய சங்கம்.

சானது மாதம் 4-ம் வ ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் நாவலப்பிட்டிய கதிரேசன் பள்ளிக்கூடத்தில் சங்க உப அக்கிராசனர் ஸ்ரீமான். எஸ். எம். அகஸ்தியன் அவர்களின் தலைமையின் கீழ் கூட்டப்பட்டது. இம்மாகாணத்தின் பலபகுதிகளிலிருந்தும் திரளான தேசாபிமானிகள் விஜயம் செய்திருந்தார்கள். குறித்தநேரத்தில் சபாநாயகர் சபையோருக்கு ஆசிகூறி வந்தனமளித்து, தாம் எடுத்துக்கொண்ட பொருப்பை அவையடக்கமாகக் கூறியபின் விளம்பரம் வாசித்து, இங்கு இந்தியர்கள் தங்களின் நலத்தின்பொருட்டுத் தாமே யுழைக்கவேண்டியிருப்பதால் ஒற்றுமையுடன் சேர்ந்து நமக்குண்டான இன்னல்களை அரசாங்கத்தாருக்கு அறிவித்து நிவர்த்திக்கும்பொருட்டு இச்சங்கம் கூட்டப்பட்டது. இவ்விபரத்தைத் தோட்டத்துரைமார்களுக்கும் அறிவித்திருக்கிறோம். அன்னார்கள் கூடியவாறு உதவியளிப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆதலால் ஊக்கமாகவும் ஒற்றுமையுடனும் உழைத்தால் நாம் சட்டாயம் சித்திபெறுவோமெனக் கூறினர். அதன் பிறகு இங்கிலீஷிலும் வந்தனோபசாரமும் சங்கத்தின் நோக்கமும் அடங்கியுள்ள பத்திரிகை வாசித்து இசசங்கத்தின் நோக்கத்தை விளக்கிச்சொல்லும்படியாக கனம். அவிட்டப்பெருமானவர்களையும், இச்சங்கத்திற்கு அக்கிராசனரான கனம். சி. எஸ். சிவனடியானவர்களையும் கேட்டுக்கொண்டதின் பேரில் கனம். அவிட்டப்பெருமானவர்கள் இங்கிலாந்திலிருந்து வந்த டோனுமோர் கமிஷனர் ரிபபோட்டையும் இச்சுதந்திரம் கொடுக்கப்படாதென்று வாதிடும் சிங்களச் சகோதரரான சுயநலத்தையும் உள்ளவாறே தெளிவாகக் கூறினார். ஆதலால் நாமெல்லோரும் தொழிலாளர், வியாபாரி, தோட்டமுதலாளி, தோட்டத்தின்வேலைக்காரரான உத்தியோகஸ்தர் யாவரும் ஒற்றுமையுடனுழைத்து நமது சுதந்திரத்தையடையவேண்டும். இலங்கையைச் செழிப்பித்த காரண புருஷரான 8 லக்ஷம் தொழிலாளருக்கு உரிமையில்லாதுபோனல் மற்றவர்களுக்குக் கொடுப்பதால என்ன பிரயோஜனம்? நாம் செய்துள்ள நன்றியை மறந்து அடிமையெனக்கூறிய நம்சிங்கள சகோதரரா நினைக்க என்மனம் கொதிக்கிறது. ஆதலால் நாமெல்லோரும் ஒற்றுமையுடனுழைத்து சுதந்திரத்தைக் கையாடவேண்டும்.

இன்னம் இந்தியவுக்குப் போகும்பிரயாணிகளில் 1. 2. வகுப்பு பிரயாணிகள் 50-பேரைத்தவிர ஏனையோரெல்லோரும் மூன்றாவது வகுப்பிலுள்ளவர்களே கால்சட்டைக்காரரான 50 பேருக்காக மற்றவர்களை ஆடுமாடுகளைப்போல்தள்ளுவதும் இம்சிப்பதும் அநியாயம்.

இந்தியாவுக்கு அனுப்பும் மணியாடர் சார்ச அதிகம். இலங்கை நாணயத்தைக் கப்பலடியில்மாற்றும்போது ரூபாய்க்குகமிஷன் கூடுதலாக எடுக்கிறார்கள். இவைகளைப்பற்றி இச்சங்கத்தின் உத்தியோகஸ்தர் கருத்தெடுத்து அரசாங்கத்தாருக்குத்தெரிவித்து முயற்சி எடுக்கும்படிக்குக் கேட்டுக்கொண்டார்கள். இன்னும் கட்டடம் ஒன்றுவேண்டியதிருப்பதால் அதற்கென ஒருநிதிசேர்த்து நமது ஏஜெண்டான கனம். ஐதியவர்களையும் உதவிசெய்யும்படி கேட்டு ஒரு கட்டடம் ஏற்படுத்தலாம்

அதற்குவேண்டிய முயற்சி செய்யும்படிக்கும் கேட்டுக்கொண்டார். தமக்கு இச்சங்கத்தின் மத்தியில்பேசும் அவகாசத்திற்கு உத்தரவிட்ட சபாநாயகருக்கு வந்தனமளித்து தமது உபந்யாசத்தை நிறுத்திக்கொண்டார்.

## வேற்றுமைகள் ஒழியவேண்டும்

அதன்பின்பு கனம். சி. எஸ். சிவனடியான் அவர்கள் செய்த சொற்பொழிவாவது:—நான் பேசவேண்டுமென்றவைகளை எல்லாம் தெரியும்படிக்கு கனம். அவிட்டப்பெருமானவர்கள் கூறினதினால் காலநேரத்தை வீண்செலவுசெய்யப்பிரியமில்லை. ஆயினும் இரண்டொருவசனத்தில் எனது பிரசங்கத்தைமுடிக்கிறேன். நாம்ஒத்துழைத்து அரசாங்கத்தாரின் நன்மையைப்பெறவேண்டுமென்றால் நமக்கோர் தகுந்தசங்கம் இருக்கவேண்டியதவசியமே அச்சங்கம் அபிமானமென்னும் அஸ்திவாரத்தில் கட்டப்படவேண்டும் அபிமானம் அனேகவகை. அதாவது, மதாபிமானம், குலாபிமானம், ராஜாபிமானம்,தேசாபிமானம் என்பன. இவைகளுக்குள் நம் சங்கத்திற்கும், நமக்கும் வைசியமானது தேசாபிமானமே ஆதலால் நம் பாரதமக்களனைவரும் ஒரேதேசத்திலுள்ள சகோதரரென்னும் அபிமானபுருஷனாய் யாதொருவேற்றுமை இன்றிஉழைத்தால் நம்மை அடிமைஎன்று சொல்லும் இலங்கைச்சகோதரரும் வெட்கப்படும்படிக்கு சகல உரிமைகளையும் அடைந்துகொள்ள இச்சங்கம் உழைக்கும். கனம். ஐதரியவர்களும் வேண்டிய உதவிசெய்வார்களென்று நம்புகிறேன்.

## பத்திரிகை அவசியமும்,உரிமை வழங்கவேண்டிய முறையும்

கனம். சத்தியவாகீஸ்வரையரவர்களின் உபந்யாசம்:---நமக்கு உரிமையளித்துள்ளதை எடுக்கும்படி தற்போது சிங்கள சகோதரர்கள் சட்டசபையில் கிளர்ச்சி செய்கிறார்கள். ஆனல் அவ்விஷயத்தில் எவ்வித நியாயமுமில்லாமல் அடிமையென்றும் படிப்பில்லாதவர்களென்றும் வாதாடுகிறார்கள். அதைகவர்ன்மெண்டார்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இன்னும் அதற்குப்பின் வாதாடி வாங்கித்தர கனம். ஐதரியவர்களுமிருக்கிறார்கள். சட்டசபை பிரதிநிதிகளும் பேசுகிறார்கள். இத்தோடு நாமும் ஊக்கமாக உழைத்தால் கட்டாயம் கிடைக்கும். ஆகையால் நாமும் சங்கமும் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை. ஆனல் அவ்வுரிமையை எவ்விதம் உபயோகிக்கவேண்டியதென்பதையே பார்க்கவேண்டும். ஏனெனில் சில போலிநியாயங்களைப் பேசியுளனார்கள். அவைகளில் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்: அறிவில்லாத தொழிலாளருக்கு வரிமை கொடுப்பதால் இங்குதென் இந்தியாவிலுள்ள பிராமணர் வந்து மகாத்மாவின் சிஷயாகளென்று சொல்லிக்கொண்டு நடப்பதால், அறிவிலிகளின் ஓட்டை பெற்றுவிடக்கூடும் என்று நியாயதுரந்தரர் ஆன சிங்கள நண்பரொருவர் கூறியுள்ளார். சிலசமயம் தோட்டத்துத்துரைமார்கள் தங்களின் தொழிலாளரை வசப்படுத்தி சட்டசபைக்குச் செல்லக்கூடுமென்று மற்றும் சில சிங்களவர்கள் கூறுகிறார்கள் இங்சங்கம், உவாசங்கம், கழனிவேலிச்சங்கம், இனிவரப்போகுஞ்சங்கங்கள் எல்லாம் ஒற்றுழைத்து சரியான பேர் வழியைத் தெரிந்து தங்கள் சுதந்தரத்தை வழங்கவேண்டும். எல்லாரும் வாசித்திருக்கவேண்டும். கல்வியபிவிர்த்திக்குப் பத்திரிகைகள்வேண்டும். இவைகளுக்காக இச்சங்கம் ஊக்கமாக முயற்சிஎடுத்து வேலைசெய்யுமென நினைக்கிறேன்.

கனம். சாம்ஜாண் அவர்கள் அடியிற்காட்டியவாறு பிரசங்கித்தார். என்னுடைய தேசத்தின் சார்பாக நான் எல்லாவிதமாகவும் உழைக்கக் கூடும். வாக்குரிமையை நமக்குக் கொடுக்கப்படாதெனச் சொல்லும் சிங்களச் சகோதரர்: நமக்கு கவனக்குறை வுள்ளவர்களெனச் சொல்லுகிறார்கள். கடந்த 80 வருடமாக நமக்கு நெருக்கிய தொந்தயிருந்து இலங்கையைச் செழிப்பித்துக் கொடுத்த நமக்கு நன்றி கூறவேண்டியதை மறந்துவிட்டனர். நாம் 'பணிசெய்து கிடப்பதே" என்றதைக்கடைபிடித்தவர்களே. அதாவது நாம் எல்லாருக்கும் பணிவிடைக்காரர் என்ற அர்த்தங்கொண்டு நடக்கிறதே, ஆதலால் அதற்குச் சரியான அர்த்தமான நமக்கெல்லாரும் பணிவிடைக்காரரே என்ற சரியான அர்த்தத்தை கையாடவேண்டும்! என்று வற்புறுத்திக்கூறினர். இன்னம் கனம் சத்தியவாகீஸ்வரய்யரவர்கள் உபந்யாசத்தையுமாதரித்துச் சொற்பொழிவுசெய்து சந்தோஷத்துடன் வந்தனமளித்து அமர்ந்தனர்.

## அம்மைக்குத்துக்கு அளவில்லை?

நாவலப்பிட்டிய முஸ்லீம் சகோதரரான பீ. எஸ். ஹஸன்மொய்தீன் தனக்கு மண்டபத்தில் அம்மைகுத்தி பாதித்ததைப் பற்றியும் ஒருவருடம் 4 தரம் இந்தியாவுக்குப் போய் வந்தாலும் ஒவ்வொரு தடவையும் அம்மை குத்துகிறார்கள். இத்தண்டனை கொடியதும் நியாயமற்றதுமானதால் கனம் ஹைதரி அவர்கள் இக்குறையை நிவிர்த்திக்கும்படிக்குக் கேட்டுக்கொண்டார். இதை கனம் வசுதாஸ் அவர்கள் ஆதரித்துப் பேசினர்கள். தோட்டங்களிலுள்ள உபாத்திமார்களின் சம்பளமுதலிய விஷயங்களைப் பற்றி கனம் அகஸ்தீன் தக்கவிதமாய் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று ஒருதீர்மானம் கொண்டுவந்து நிறைவேறப்பட்டது.

## இலங்கையும் தாய்நாடே

இந்தியா கவர்ன்மெண்ட் ஏஜெண்ட் அவர்கள் முதலாவது தமிழச் சங்கமான இக்கூட்டத்திற்கு விஜயம் செய்ததற்காக வந்தனமாக நன்றிகூறி சிலபுத்திமதியளிக்கும்படிக்குத் தாழ்மையாக சபாநாயகர் கேட்டுக்கொண்டதின்பேரில் அடியிற் காட்டிய புத்திகூறினார்கள். நீங்கள் என்னிடம் இச்சமயமல்ல எப்போதும் உங்கள் குறைகளைச் சொன்னல் நிவிர்த்திக்கச் சித்தமாயிருக்கிறேன். இலங்கையிலுள்ள இந்தியர்களுக்குப்பாதகமாவது சாதகமாவது நடக்கிறதாவென்று கவனிக்கும் பொருட்டே இந்திய அரசாங்கம் என்னை இங்கே அனுப்பிருப்பதால் எனதுகடமையை உங்களின் சார்பாகச் சகலநன்மைகளும் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனல் உங்களின் குறைபாடுகளை ஒருதகுந்த சங்கத்தின் மூலமாயறிவிக்கவேண்டும். இன்னும் நான் உங்களுக்கு புத்திமதிகள் கூறவேண்டுமென்று விரும்புகிறேன். இந்தியர்களாகிய நீங்களெல்லோரும் வியாபாரிகளென்றும், தோட்டத்தின் சொந்தக்காரரென்றும், தோட்டத்தின் தொழிலாளிகளென்றும் இவ்விதமாக வந்து இவ்விலங்கையை உங்களெல்லோருக்கும் சொந்த நாடாக்கிக்கொண்டிருக்கிறீர்கள். தாய் நாடாக்கிக் கொண்டிருக்கிற நீங்கள் இவ்விலங்கையை அந்நியநாடென்று எண்ணம் உங்களின் கனவிலேயுமிருக்கக்கூடாதென்பதை வற்புறுத்துகிறேன். ஆதலால் இலங்கைச் சகோதரர்களுக்குள்ள சகல உரிமைகளும் உங்களுக்குமிருக்க வேண்டும் ஆகவால் அதற்கதிகமாவும் விரும்பவுங் கூடாது.

## வசைக்கு அஞ்சவேண்டாம்

ஒவ்வொரு இந்தியரும் இந்தியாவிலிருந்துவந்துள்ள பிரதிநிதிகளே யாவீர்கள். அதில் இந்தியாவின் மரியாதையிலே விருக்கிறீர்களென்பதை மறந்துவிடக்கூடாது இந்தியாவின மகிமையிலே இங்கு பலபகுதிகளிலும் வியாபித்திருக்கிற உங்களுக்கு ஆங்காங்கே சங்கம் வேண்டும் கூடுமானல் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு சங்கம் வேண்டும். இவைகளுக்கெல்லாம் பொதுவானமத்திய சங்கமொன்றிருக்க வேண்டும் இவைகளெல்லாம் ஒன்றோடொன்று சுடுபட்டுழைக்கவேண்டும். ஆங்காங்கேயுள்ள தீர்மானக்குறைவுகளை உங்கள் சங்கத்திற்குச் சமர்ப்பிக்கவேண்டும். அசாங்கம் எனக்குத் தெரிவித்தால் சகல நன்மைகளுக்கும் நான்பாடுபடுவேன். இப்படி ஒவ்வொரு தனிச்சங்கமும் இப்போது சங்கத்தோடு ஒத்துழைப்பதால் ஒவ்வொன்றும் தன் தன்வலிமையிலிருக்கிறதில்லை. ஆனல் உங்களைவற்புறுத்தவில்லை- இன்னும் அரசியல் விஷயத்தின் போராட்டத்தில் அதிகக்கடுமையானவார்த்தைகள் சொல்லப்படலாம். நீங்கள்மட்டும் இலங்கை நன்மைசெய்துள்ள பிரதிபலனிலேயே வைத்துப் பேசவேண்டும். உங்களைப்பற்றி எவ்வளவு பாதகமான வார்த்தைகள் பேசப்பட்டாலும், வார்த்தைகளால் தீங்கொன்றுமில்லை. இதைப் போல் இழிவான வார்த்தைகளும் கூறப்படும். அவைகள் உங்களைப் பாதிக்கமாட்டா. இவைபோல் என்னதீங்கும் நேரிடாது. இச்சமயம் இதற்கு அதிகமாக சொல்ல அவசரமில்லை ஆதலால் இத்துடன் முடிக்கிறேன் இன்னும் இச்சங்கம் நீடூழி வாழ்வதாக இச்சங்கத்தாரும் தம் வேலையைச் செவ்வையாகச செய்வார்களென்றும் நம்புகிறேன் (கரகோஷம்)

எங்களின் நன்மையைக்கருதி உபந்நியசித்த கனம ஹைதரி அவர்களுக்கு சபாநாயர் முதல் சகலரும் வந்தன மளித்தார்கள். பின்னர் அக்கிராசனர் வந்திருந்தவர்களுக்கு வந்தனோபசாரங் கூறியபின் கூட்டம் இனிது கலைந்தது.

—0—

## கடிதம்.

'இலங்கை இந்தியன்'
பத்திராதிபரவர்களுக்கு,

அன்புள்ள ஐயா,

வந்தைக்கு காணிகளை வாங்கி அதிலாபம் எடுக்க முயற்சிக்கும் சீமான்களுக வந்தைக்குக கொடுக்கும் புண்ணியவான்களும் அவசியம் கவனிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றனர். இலங்கையில் இந்திய ஜனங்கள் இருக்கிறதற்கு இடம் போதாமலும் குடினவாடகை கொடுக்கமுடியாமலும் படும் கஷ்டம் இன்னதென்று எழுதமுடியாது. அதோடு மழைகாலம் வந்து விட்டால் மிகுந்த ஏழை ஜனங்கள் குடினவாடகை கொடுக்க முடியாது- ரோகளிலிருந்து கஷ்டமடைகிறார்கள். ஏழைகளுக்கு உதவிசெய்ய வேண்டியது பூமி, வீடுமுதலிய சம்பத்துள்ள கனவான்கள் கடமை. கூடுதலான லாபம் எடுக்களண்ணும் கனவான்கள் வந்தை முடியுமுன் முன்பணம் கொடுத்து வீடுகளை எடுத்துக் கொள்வதால் சொந்தக்காரர் ஏழைகளுக்கு உதவி செய்யச் சந்தர்ப்பமில்லாது போய்விடுகிறது. ஆதலால் ஏழைகள் சுகாதாரக்குறைவாய் வாழவேண்டிருக்கிறது. வந்தைக்குக் கொடுத்துக் கொண்டேயிருந்தால் முனிசிபல் சபையாரும் வரியைக்குறையார்கள். எவ்விதமாயாவது ஏழைகளுக்கு இடமளிக்கவேண்டியது அவசியம்.

இங்ஙனம்
O. L. S. A. மரைக்கார்.
மாஜி சேர்மன்

தேவிபட்டணம்
4-11-28

———

வாசகர்களுக்கு:—
இலங்கை இந்தியனில் விளம்பரம் செய்யும் வர்த்தகர்களுக்கு ஆடர்செய்யும்பொழுது எமது பத்திரிகையைத் தயவு செய்து குறிப்பிடவும்.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நற்றுணையா வது நமச்சிவாயவே.

என்றபாடலை ஓதவும் கல்லானது தெப்பமாக மிதந்தது. கயிருனது சின்னு பின்னமாய் அறுப்புண்டதினுல் அக்கற்றெப்பத்திலேறி கரைசேருமளவும் பஞ்சாக்ஷரப் பதிகத்தை ஓதியருளினர். பின்பு இவர் இவ்விதம் வர்தகையும், இன்னவரின் பெருமையையும், பாடலிபுரத்து மவிக்கிருக்கண்ட காடனென்னும் பல்லவ ராஜன் தனியேயிருந்து செவிது ஆய்ந்து, இன்னுளிறுதியாக சமணர்ச்சாரியர்களின்மாயவலையிற் சிக்கி நமது நாயனுரை பலவிதம்துன்புறுத்தி விட்டோம் இனி சும்மாவிருத்தல் நீதியன்று யென்ற யெண்ணமுடையவராகி, திருவதிகைவந்து, நம் கண்ணுதற்கடவுளின் தொண்டராகிய திருநாவுக்கரசுசுவாமிகளின் திருத்தாளில் வீழ்ந்து, ஐயனே! அடியேன் சமணரால் தங்களைத் துன்புறுத்திவிட்டேன். அதனை மன்னித்தருளவேண்டுமெனப் பணிந்துநின்ற, அரசனைநோக்கி, அரசனே! நீ யென்செய்வ எல்லாம் சிவன்செயலல்லவோ? அதனைநீ செய்ததாய் நினைப்பது நீதியாமோ அதனுல் மனமகிழ்வாயென அமிழ்த மொழியாலே தி அரசனை ஆண்மினைக் கேவிட்டுச் சமணர்களின் பள்ளிகளும், பாளிகளும், இடித்து தமது பிறப்பிடமாகிய திருவதிகையில் குணதரீச்வரமென்னும், சிவஸ்தலத்தைக் கட்டி முடித்தனர். பின்பு பன்னுளாய் சிவஸ்தலங்கள்தோறும் சென்றுபலபாடல்களைப் பாடி விளக்கியுள்ளார். அதனில்மாகாப்பாடலாகியதிருவையாற்றிப் பாடியது. அடிகள் திருவற்றியூரில் வைத்து,

மனமெனுந் தோணிபற்றி மதியெனுங்
கோலையூன்றி சினமெனுஞ் சரக்கையேற்
றிச் செறிகட லோடும்போது மதனெனு
ம் பாறைதாக்கி மறியும் போதறிய வொ
ண்ணு துனையுனு முணர்வை நல்காயொ
ற்றி யூருடைய கோவே

யென்றும்

இருவேயென் செல்வமே தேனே வா
னோர் செழுஞ்சுடர்ச் சோதிமிக்க
உருவே யென்னுறவே யென்னூனே
யூனினுள்ளமே யுள்ளத்தினுள்ளே நின்ற
கருவே யென்கற்பகமே கண்ணே கண்
ணிற்கருமணியே மணியாடு பாவாய்
காவாய்

அருவாய வல்வினை போயடையாவண்
ண மாகமாடுதண்டுறையுறையுமமரரேறே

யென்றதிருப்பாடல்களைத் திருவாவடுதுறை பால்வைத்துப்பாடியும் எண்ணிலாத் தனிப்பாடல்களும், ஆங்காங்கே பாடியுள்ளார்கள். இவ்வாறு பற்பல இனியபாடல்கள் பாடித் திருநாவுக்கரசர் திருவாலயதெரிசனம்செய்து சாயுச்சியபதவியை அடைந்தனர். ஆனதுபற்றியே நம்சகோதரர்களனைவரும், சிவபணிவிடைக்குஉரித்தாகி, யென்றும் பத்திநெறினைக் கையாண்டு, சீரயராயின் குசெகமெச்சவாழுமின். அதுவே எக்காலத்தும் நீங்காபுகழ்சேரும். அதற்கெனவே நம் பெரியார் பல்விடரிற் சிக்குண்டும் தாமெடுத்த காரியங்களை எவ்விடரும் தாங்கிப்பேர்பெற்றிருக்கின்றார்கள்.

——0——

1. ஒரு மனிதனுடைய அல்லது ஒரு மனித சமூகத்தினுடைய ஆன்ம சுகத்தைக் கெடுக்கும் செல்வ விருத்தி முறை அநீதியானது, ஆகையால் பாபகரமானதாகும்.

2. செல்வ விருத்தி முறைகளை அறிந்து கொள்வதற்கு தற்காலம் கற்கப்பெறும் நூல்களைவிட சமய சாஸ்திரங்களே சிறந்தவை, கேடு விளையாதவை.

3. 'பணமுடையவன் பரம ராஜ்யத்தில் புகுவதைவிட ஒட்டகம் ஊசித்துவாரத்தில் நுழைவது வெகு எளிது.' இது மனித வாழ்க்கையின் நித்தியமான நீதிநெறியாகும்.

4. கடவுளுக்கும் பொருளுக்கும் ஒருங்கே ஊழியஞ் செய்ய முடியாது என்பது செல்வ விருத்தி உண்மைகளில் தலைசிறந்ததாகும்.—மகாத்மாகாந்தி.


———


சுருண்ட உரோமத்தை பணியச்செய்து
நாள் முழுதும் உங்களது பார்வையை அலங்காரமாகவும் செம்மையாகவும் ஆக்குகின்றது.




டாக்டர் ட்ராலியின்
**லயன்**
**ப்ரில்லியன்டைன்**
எல்லாவிடங்களிலும் கிடைக்கும்.
A. V. R. A. Adycappa Chetty
COLOMBO (ஃ. 1. 4)

"ஆர்கையில்"
துவிசக்கர (சைக்கிள்) வண்டிகள்




இலங்கையில் மிக குறைந்த
விலைரூபாய் 85-00
சிறு தொகை பணம் கட்டி சைக்கிள்கள் வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்கிறோம்.
**HOARE**
& CO (ENGINEERS) LTD
தபால் பெட்டி நெ. 22
கொழும்பு.
———
ஆர்டர் கொடுப்பவர்கள் இப்பத்திரிகையை குறிக்கவும்.

AMERICAN
# EVEREADY
## FLASHLICHTS & BATTERIES.




அமெரிக்கன்
எவர்ரெடி
தூரதிருஷ்டி காந்ததீபங்களும்
பாட்ரிகளும்



இந்த காந்தவிளக்குகள் எல்லாவிடங்களிலும் விற்கப்படுகின்றன.

எல்லா தினுசுகளிலும் அளவுகளிலும் கிடைக்கும்.


இரவுகாலங்களில் நீங்கள் எங்கே போக நேர்ந்தாலும் ஒரு அமெரிக்கன் எவர் ரெடி காந்தவிளக்கை எடுத்துக்கொள்ளுங்கள். எப்பொழுதும் சௌகரியத்தை தரக்கூடியது. நம்பிக்கையானதும் எவ்வித ஆபத்தும் வாராதபடி பாதுகாக்கக் கூடியதுமான காந்த விளக்கு இதுவே.



எப்பொழுதும் உங்கள் காந்தவிளக்களுக்கு அமெரிக்காவில் தயார்செய்யப்பட்ட

'யூனிட்ஸெல்'லுகளையே

உபயோகியுங்கள். அவைகள்தான் நீண்டகாலம் உழைக்கக்கூடியவை.



டாஜ் அண்ட் ஸெய்மூர் லிமிட்டெட்,
28, சத்தாம் வீதி, கோட்டை, கொழும்பு
*DODGE & SEYMOUR Ltd*,
28, CHATHAM STREET, FORT
COLOMBO.




புதிய டூரிங் கார்

## உங்களுடையது

**ரொக்கம் ரூபாய் 2450**

அல்லது

முதலில் காரைப் பெற்றுக்கொள்ளும்பொழுது (இன்ஷூரன்ஸ தொகை தவிர) ரூபாய் 800-ம் செலுத்தி மீதி தொகையை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 164 வீதம் 11 மாதமாகவும் செலுத்த வேண்டும்.




உங்கள் பக்கத்திலுள்ள போர்ட் வியாபாரிக்காவது ஸிலோன் டிஸ்ட்ரிப்யூட்டர்களுக்காவது எழுதி விவரங்கள் தெரிந்து கொள்ளவும்.

பியேர்ஸ், லெஸ்லி அண்ட் கொம்பனி,
பெயர்பீல்ட் ஹவுஸ், யூனியன் பிளேஸ்
கொழும்பு.



## கோல்கேட் ஆக்ட்டகன் சோப்

மிகவும் உபயோகமானது.




## உலகப் பிரசித்திபெற்ற ஆக்ட்டகன் சோப்

வஸ்திரங்கள் சுத்திசெய்வதற்கும் மற்றும் வீட்டில் எப்பொழுதும் உபயோகிப்பதற்கும் மிகவும் அருமையானது.

**ஆக்ட்டகன் சோப்**

எந்த ஜலத்திலும் உபயோகிக்க கூடியது. மிக மெல்லிய வஸ்திரங்களுக்கும் யாதொரு கெடுதியும்செய்யாதுஎந்த அழுக்கையும் மிக சுலபமாகப் போக்கக்கூடியது.

**மூன்று சிகப்புப்பட்டைகளுள்ள காகிதத்தில் சுத்தியிருக்கும் ஆக்ட்டகன்சோப்பைக்கவனித்து வாங்குங்கள்.**

அக்காகிதங்களை கவனமாய் சேர்த்து வையுங்கள். அவைக்குப் பதிலாக தக்க பரிசுகள் கிடைக்கும்.

**ஆக்ட்டகன்கூப்பன்களை சேர்த்து வையுங்கள்**

விலையுயர்ந்த பரிசுவிபரங்கள் அடங்கிய நேர்த்தியான கேட்லாக் கேட்போருக்கு இனமாக அனுப்பப்படும்.

சோல் ஏஜண்டுகள் :

**A. V. R. A. Adycappa Chetty,**
15, Sea Street, COLOMBO.

**A. M. Othuman Pillai,**
24, Keyser Street, COLOMBO

## எல்லா தாய்மார்களுக்கும் சிறந்த புத்திமதி இதுவே

நீங்கள் பிரசவித்த பின் பலமற்றவர்களாகவும், பலத்தை இழந்தவர்களாகவும் தோன்றினுல் ஏமாந்தவரைப் போல இராதீர்கள். நீங்கள் இழந்த பலத்தையும், தேக வலிமையையும் மறு முறையும் நீங்கள் நிச்சயமாய் அடையலாம் இதற்குக் கைகண்டது "ஹக்கோஸன்" ஒன்றே மற்றவைகளினுல் யாதொரு பிரயோஜனமும் ஏற்படாது.

தேகத்திற்கு உற்சாகத்தையும் சுறு சுறுப்பையு கொடுக்கக் கூடியது இந்த டானிக் ஒன்றே. இச்சிறந்த டானிக் ஜீரணசக்தியை அதிகப்படுத்தி ரத்தத்தைச் சுத்திசெய்கிறது.

பல பிரமிக வைத்தியர்களால் இது மிகவும் மேலானதெனச் சிபார்சு செய்யப் பட்டிருக்கிறது.




எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.


# இந்தியர்களே! சற்றுகவனியுங்கள்!

———oo———

## 'இலங்கை இந்தியன்' பத்திரிகைக்கு நீங்கள் ஏன் சந்தாதாரராக சேர வேண்டும்? என்பதற்கு காரணங்கள் ஆறுஉள. அவை:—

1. இலங்கையில் இந்தியர்களுக்காக ஊக்கத்துடன் உழைக்கும் தமிழ்ப்பத்திரிகை இது ஒன்றே. . முக்கிய நோக்கமாக கருதி இப்ப
2. இப்பத்திரிகை நடத்துவதில் உடமஸ்தருக்கு ஏற்படும் தியாகத்தையும் பணநஷ்டத்தையும் பொருள் படுத்தாது இந்தியரின் நலத்தையே த்திரிகை பாடுபட்டு வருகிறது.
3. இப்பத்திரிகையின் அபிப்பிராயங்கள் இந்தியா கவர்மெண்டாலும் இலங்கை கவர்மெண்டாலும் நன்கு மதிக்கப்படுகின்றன.
4. இப்பத்திரிகையானது இத்தீவிலுள்ள இந்தியரின் மனோபாவத்தையும் அவரது அபிப்பிராயங்களையும் உள்ளவாறே விளக்கி காட்டுகின்றது.
5. பத்திரிகை பிரசுரிப்பதில் ஏற்படும் செலவுக்குமட்டும் போதுமானபடி பத்திரிகையின் சந்தா மிககுறைவாகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் சிறிதும் தாமதமின்றி, இத்துடன் சேர்த்திருக்கும் பாரத்தை பூர்த்திசெய்து எங்களுக்கு உடனே அனுப்புங்கள்! இதனை நடத்தவுமில்லை. தன
6. இப்பத்திரிகையை ஓர் பிழைக்கும் வழியாகக் கருதி இதன் சொந்தக்காரர் நடத்திவரவில்லை. அவர் தன் செலவுகளை நிர்வகிக்கும் பொருட்டு க்கேற் பட்டுள்ள சொந்தத் தொழிலில் அரும்பாடுபட்டுச் சேர்க்கும் பொருளையே அதன் மூலதனமாக வைத்து அதனை நடத்திவருகிருர். தனது தொழிலி லீடுபட்டு சலபமாக பணத்தைத் தேடுவதற்குரிய நேரத்தையும் அதற்காகவே தியாகம் செய்துவருகிருர்.

சந்தாதாரராக சேருவோர் தயவுசெய்து கீழ்க்கண்ட துண்டைப் பூர்த்திசெய்து அனுப்புங்கள்.
"இலங்கை இந்தியன்" மனேஜரவர்களுக்கு,
107,B, ஹல்ஸ்டார்ப் தெரு, கொழும்பு.

**சந்தா விபரம்-**

——0——

| | | |
|---|---|---|
| இந்தியா, இலங்கை முதலிய இடங்களுக்கு | வருட சந்தா | ரூ. 5-00. |
| | 6 மாதச் சந்தா | ,, 3-00. |
| வெளி நாடுகளுக்கு | வருட சந்தா | ரூ. 6-00. |
| | 6 மாதச் சந்தா | ,, 3-50. |

ஐயா,

அடியிற் கையொப்பமிட்ட என்னைத் தங்களுடைய "இலங்கை இந்தியன்" தமிழ் வாரப் பத்திரிகைக்கு ஒரு வருட / 6 மாத சந்தாதாரராகச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

ஒப்பம்........................

பெயர்........................

விலாசம்........................

........................

குறிப்பு:- தயவுசெய்து பெயரையும், விலாசத்தையும், தெளிவாக எழுதியனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்

Printed and published for the Proprietor by H. Nalliah B. A. [residing at 97 Mtliban St. Colombo] at ,,Coylon Indian" Printing Woks, 107B. Hulftsdorp Street, Colombo.